Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி–06 | 22–08–2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை –186

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
077-6059672
(சி-9957)

# பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பாராளுமன்ற வளாகத்துள் அனுமதி மறுப்பு

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அதிருப்தி சபாநாயகருக்கு முறைப்பாடு

(கொழும்பு)



**பிரதமருக்கான பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளை பாராளுமன்ற வளாகத் துக்குள் நுழையவிடாது தடுத்தமை குறித்து சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அதிருப்தியடைந் துள்ளார். பாராளுமன்ற வாசலில் நின்ற பொலிசார் இவ்வாறு தடுத் தமை குறித்து சபாநாய கருக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முறைப் பாடு செய்துள்ளார்.**

சிறிலங்காவின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது இராணுவக் கொமாண்டோ பாதுகாப்புப் பிரிவினரை பாராளுமன்றக் கேற்றுக்குள் நுழையவிடாது பாராளுமன்றப் பாதுகாப்புப் பொலிஸ் பிரிவினர் தடுத்து நிறுத்தியதாகச் சபாநாயகருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து பரிசீலிப்பதற்காக கட்சித் தலைவர்களின் கூட்டமொன்று நேற்று பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றது.

இதில் குறித்த விடயம் சம்பந்தமாகப் பொலிஸ்மா அதிபர் இந்திராடிசில்வாவிடம் பிரதமர் விளக்கம் கேட்டபோது பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின் படியே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகப் பொலிஸ்மா அதிபர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு மாத கால அவகாசம்

சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்காக இரண்டு மாதகால அவகாசம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

இது தொடர்பாக அடுத்த வாரம் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட இருப்பதாக பொது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனை பொலிஸ் தலைமையக பொலிஸ்அதிகாரி சுட்டுக்கொலை

கல்முனை வாடி வீடு வீதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் கல்முனை பொலிஸ் தலைமையகத்தில் கடமை புரியும் பொலிஸ் அதிகாரியான ஜயரட்ண (வயது 40)என்பவர் இனந்தெரியாதோரினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். காயமடைந்த நிலையில் இவர் மட்டக்களப்பு போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் அமைச்சர்கள் 9பேர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களை மீள ஒப்படைக்காது இன்னமும் அவற்றில் வசித்து வரும் முன்னாள் அமைச்சர்கள் ஒன்பது பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு இந்த ஒன்பது பேருக்கும் எதிராக நீதிமன்றக் கட்டளை பிறப்பிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

பாராளுமன்றிற்கு தெரிவாவதில் தோல்வியுற்ற இந்த ஒன்பது பேரும் கொழும்பு கெப்பிற்றிப் பொல மாவத்தையில் உள்ள வாசஸ்தலங்களை விட்டு வெளியே

(12 ஆம் பக்கம் பார்க்க)

### காயாங்கேணியில் வீரச்சாவடைந்த

## இரு போராளிகளின் வித்துடல்கள் இன்று தாண்டியடி துயிலுமில்லத்தில் விதைப்பு

நேற்று முன்தினம் காயாங்கேணியில் வீரச்சாவடைந்த முன்னாள் அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் பாவா மற்றும் யோகா ஆகியோரின் வித்துடல் இன்று மாவட்டச் செயலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 4.30 மணியளவில் தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்படவுள்ளன.

நேற்று மாலை இவர்களின் வித்துடல்கள் அவரவர் இல்லங்களுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படடிருந்தன. இவை இன்று காலை மாவட்டச் செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டு மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளன.

## போராளிகள்மீதான தாக்குதலுக்கு 'ரெலோ' அமைப்புக் கண்டனம்

வாகரைப் பிரதேசத்திலுள்ள மாங்கேணி இராணுவத்தினருடைய முகாமிற்கு அருகில் வைத்து நேற்று முன்தினம் தமிழீழ விடுலைப் புலிகளின் மூத்த அரசியல்துறைப் போராளி பாவா, யோகா மற்றும் வேணுகா மீது மேற்கொள்ளப்பட்ட கிளை மோர்த் தாக்குதல் மிலேச்சத்தனமான ஒரு செயலாகும். இதனை தமிழீழ விடுதலை இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறதெனவும் இத்தாக்குதல் இராணுவக் கட்டுப்பாட்டில் நடைபெற்றதன் காரணமாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் முருகன் ஆலயவளவில் ஓடித்திரிந்த பொலிஸ் வாகனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலயக் கொடியேற்ற வைபவத்தில் கலந்து கொண்ட அடியவர்களுக்கு பலாலி படைத்தளத்தில் இருந்து வந்த பொலிசாரின் ஜீப் வாகனம் ஒன்று பெரும் இடையூறு விளைவித்தது.

நல்லூர் பின்வீதியில் போடப்பட்ட வீதித்தடைகளை மீறி இவ்வாகனம் நேற்றுக்காலை கோவில் (12 ஆம் பக்கம் பார்க்க)




படம்-செல்வா

## மட்டு.மாங்கேணியில் ராணுவம் மீது தாக்குதல்

### -இரு படையினர் காயம்-

மட்டக்களப்பு மாவட்டம் மாங்கேணியில் நேற்றுக்காலை 6.15 மணியளவில் தாக்குதல் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளதாகவும், இச்சம்பவத்தில் இராணுவக் கப்டன் ஒருவர் உட்பட இருபடையினர் காயமடைந்துள்ளதாகவும் இராணுவத்தரப்புத் தகவலொன்று தெரிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்துகொண்டிருந்த இராணுவத்தினர் நோக்கி அடையாளம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வாழைச்சேனைப் பகுதியில்

## பாடசாலை சென்ற சிறுவனை ஏழு தினங்களாகக் காணவில்லை

வாழைச்சேனை கருங்காலிச்சேனைப் பகுதியில் ஆறு வயதுச் சிறுவனை கடந்த ஏழு நாட்களாகக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. கருங்காலிச்சேனைப் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆண்டு 2இல் கல்வி கற்கும் இம் மாணவன் கடந்த 7 தினங்களுக்கு முன் பாடசாலைக்குச் சென்றதாகவும், அதன் பின்னர் அவரைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

### –வவுனியா இராசேந்திரகுளம் பகுதியில்–

## கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதற்கு எதிராக மக்கள் வாகனத்தை மறித்து ஆர்ப்பாட்டம்

(செட்டிகுளம்)

வவுனியா நகர்ப் பகுதியில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதை எதிர்த்து இராசேந்திரம் குளம் பகுதியில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நகர்ப பகுதியிலிருந்து கொண்டு செல்லப்பட்ட கழிவுப் பொருட்கள் அடங்கிய வாகனத்தை நீண்ட நேரம் தடுத்து வைத்து இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இறுதியில் வவுனியா நகர சபைச் செயலாளர், வவுனியா பிரதேச செயலாளர்களின் உறுதிமொழிகளை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. காலை 8.00 மணியிலிருந்து இராசேந்திரகுளம், சூடுவந்தபுலவு,

(12 ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

### உடன்தேவை

ஏ-9 வீதியில் (டிப்போச் சந்திக்கும், கந்தசாமி கோவிலுக்கும்) இடையில் கிணற்றுடன் கூடியதும், கட்டடங்களுடனும் அமையக்கூடிய வாடகைக்கு கடை இருத்தல் விரும்பபப்படுகின்றது. உடன் தொடர்பு கொள்ளவும். இ.சுதா 65,புகையிரதவீதி, கிளிநொச்சி. (4983)

## திருத்தம்

20.08.2004 அன்று (வெள்ளிக்கிழமை) தினசரியில் பிரசுரிக்கப்பட்ட "தனியார் பேருந்து உரிமையாளர்கழகம், வன்னி" எனும் விளம்பரத்தில் பொதுக் கூட்டம் 25.06.2004 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது தவறானதாகும். கூட்டம் 25.08.2004 அன்று நடைபெறும் என்பதே சரியானதாகும்.

# இலங்கையில் 450 எயிட்ஸ் நோயாளிகள் 8000 பேருக்கு பாதிப்பு எனக் கணிப்பீடு

### ஊடகவியலாளருக்கான கருத்தமர்வில் தெரிவிப்பு

இலங்கையில் இற்றைவரை 450 எயிட்ஸ் நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், சுமார் 8000 பேர் வரையில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளதாகவும் கிளி.மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று பணிமனையில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கில் இவ் விபரத்தை அவர் தெரிவித்தார்.

இக் கருத்தமர்வில்.எயிட்ஸ் நோய் ஒருவருக்குத்தொற்றி மூன்று மாதங்களின் பின்னரே இந் நோயைப்பரிசோதனை மூலம் கண்டறியமுடியும் என்றும், 2தொடக்கம் 12 வருடகாலம் இந் நோய் வெளித்தெரியப் பிடிக்கும் என்றும், ஆனால் எயிட்ஸ்நோய் வெளித்தெரியத் தொடங்கும் முன்னரே அவர் நோய்க்காவியாக இருப்பது என்பது மிகவும் ஆபத்தான விடயம் எனவும் எடுத்துக் கூறப் பட்டது.

இந்நோய் மிகவும் அச்சமூட்டும் ஒன்றாக இருப்பதாலும், இந் நோய் ஏற்படாது பாதுகாத்துக் கொள்வதே அதிலிருந்து தப்பிக் கொள்ள ஒரே வழி என்பதாலும் இது தொடர்பான விழிப்புணர்வூட்டல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும், அதனடிப்படையில் சமூகத்தின் பல மட்டங்களிலும் இருக்கின்ற அரச, அரசசார்பற்ற பிரதிநிதிகள், அரசியல் பணியில் ஈடுபடுவோர், ஆன்மீகவாதிகள்,ஊடக வியலாளர்கள் எனப் பலருக்கும் இக்கருத்துக்களை வழங்கி அதனூடாக மக்களுக்கு எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சி செய்து வருவதாகவும், இன்று இந்நோய் இலங்கையில் பரவுவதற்கான வாய்ப்பு அதிகரித்துவருகின்றது என்றும் எனவே இந்நோய் தொடர்பாக மக்களை விழிப்படைய செய்ய வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு எனவும் எடுத்துக் கூறப்பட்டது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள மாகாண சுகாதாரசேவைகள் பிரதிப்பணிப்பாளர் செயலகத்தில் நேற்றுக் காலை பத்து மணியளவில் ஆரம்பமான இந் நிகழ்வில் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இக்கருத்தமர்வில் எயிட்ஸ் நோயால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியும்,எயிட்ஸ் நோய் ஏற்படும் போது காணப்படும் குணங்குறிகள் பற்றியும், இந்நோயை எவ்வாறு கண்டு பிடிப்பது? இது எவ்வாறு கடத்தப்படுகிறது? இதன் தொற்று ஏற்படாத ச ந்தர்ப்பங்கள், இந் நோய் பரவுதலைத் தடுக்கும் முறைகள் என பல வகையாக கருத்துக்களை விரிவான முறையில் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்களும், வைத்திய கலாநிதி பிறைட்டன் அவர்களும், வைத்திய கலாநிதி சுஜந்தன் அவர்களும் வழங்கியதுடன், கேள்விகளுக்கும் பதிலளித்தனர்.

நிகழ்வின் வரவேற்புரையினை பணியகச் செயலாளர் நமசிவாயம் வழங்கினார். (ச,கு)

# மருத்துவப் போராளி தூயவனின் "யுத்த காண்டம்" நூல் வெளியீடு

மருத்துவப்போராளி தூயவனின் யுத்தகாண்டம் என்ற நூல் வெளியீடு நேற்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. மாலை 4.30 மணிக்கு ஆரம்பமான மேற்படி நிகழ்வில் பொது ஈகச்சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் ரேகா ஏற்றிவைத்தார். மங்கல விளக்கினை களமுனை மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் மனோஜ் ஏற்றிவைத்தார். மருத்துவக்கல்லூரியின் பொறுப்பாளர் சுஜந்தன் தலை மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையினை மருத்துவப் போராளி வாமன் நிகழ்த்தினார்.




தலைமையுரையினைத் தொடர்ந்து வெளியீட்டு உரையினை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் நிகழ்த்தினார். நூலின் முதல் பிரதியினை வைத்திய கலாநிதி கெங்காதரனிடமிருந்து திருமதி எழில்மதி கரிகாலன் பெற்றுக் கொள்ள, ஏனைய சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பெற்றன. தொடர்ந்து மதிப்பீட்டுரையினை வைத்திய கலாநிதி சிவபாலன் மற்றும் திருநாவுக்கரசு ஆகியோர் வழங்க பதிலுரையினை நூலாசிரியர் தூயவன் நிகழ்த்தினார்.

இவ்வெளியீட்டு விழாவில் மருத்துவப்பிரிவினர் துறைசார்ந்த பொறுப்பாளர்கள், போராளிகள், மற்றும் எழுத்தாளர்கள், வாசகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.(கு)

## கண்டெடுப்பு

வாகன திறப்புடன் கூடிய பல திறப்புக்கள் அடங்கிய திறப்புக் கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனை யாழ். சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (அலு)

# காது,மூக்கு, தொண்டை தொடர்பாக கிளி.மருத்துவமனையில் விசேட சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் காது, தொண்டை, மூக்கு தொடர்பான நோயாளர்களுக்குரிய விசேட சிகிச்சை நடைபெற்று வருகின்றது.மேற்படி சிகிச்சையினை உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் வருகை தந்திருக்கும் வைத்திய கலாநிதி பெஞ்சமின் அவர்கள் மேற்கொண்டுள்ளார். இவர் தொடர்ந்து இம் மாதம் 26ஆம் திகதிவரை காது, மூக்கு, தொண்டை தொடர்பான நோயாளர்களைப் பார்வையிடுவார். பயன் பெற விரும்புபவர்கள் மாவட்ட வைத்தியசாலையில் சென்று சிகிச்சை பெறலாம் என் அறியத்தந்துள்ளனர். (கு)


# நல்லூர்க் கந்தன் வருடாந்த மஹோற்சவம் -2004



## யாழ்ப்பாணம்

வா! வா! சண்முகா! வடிவேல் முருகா!
தேரேறி தமிழருக்கு வாழ்வு தர வா! வா!

"மரகத மயில் மேல் வருமுருகா!
அரகர சிவசிவ ஆறுமுகா வா!
சரவண பவனே சண்முகனே!
வரம் தர வா வா என்முன்னே
அரவணி சிவனாருள் பாலா
பரவரமுரன் பரமதயாளா!"
(சிவயோக சுவாமிகள்)

அன்புடையீர்:

யாழ்.நகரில் புகழ் பூத்த நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவம் நேற்று (21.08.2004) சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. கடந்த காலங்களைப் போல் இம்முறையும் மேற்படி ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி அன்னதான மடத்தில் முருகன் அருள் வேண்டி வரும் அடியார்களுக்கு திரு விழா நடைபெறும் 26 நாட்களும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அன்னதானத்தில் பங்குபற்றிய சகல அடியார்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தங்கள் பேருதவிக்கு நல்லைக்கந்தன் அருள்புரிவானாக.

தொடர்ந்தும் இவ்வாண்டு வருடாந்த உற்சவம் நேற்று (21.08.2004) சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து 26 நாட்களும் மேற்கூறிய மடத்தில் அன்னதானம் வழங்க முன்வந்துள்ளோம். இந்நற்பணிக்குத் தங்கள் அன்பார்ந்த ஆதரவை நல்குமாறு வேண்டுகின்றோம்.

C.Somaskandan
மூத்ததம்பி அன்னதான மடம், 139,கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Jaffna 2389

சி-10131

# புனித நகரான நஜாப்பில் கடும் மோதல் 77 பேர் பலி; 70 பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கின் புனித நகரமான நஜாப்பில் சியா மதத்தலைவர் அல் சதாரின் படைகளுக்கும், அமெரிக் கப்படைகளுக்கும் இடையில் நடந்த போரில், அமெரிக்காவின் விமானத்தாக்குதலில் 77 பேர் பலி யானதுடன், 70பேர் காய மடைந்துள்ளனர்.

ஈராக்கின் புனிதநகரமான நஜாப்பில் சியா மதத்தலைவர் அல் சதாரின் படைகளுக்கும், அமெரிக் கப்படைகளுக்குமிடையில் கடும் போர்வெடித்துள்ளது.

கடந்தவியாழனன்று சதார் தலைமையிலான மெக்தி படை யினர் இலக்குகள் மீது அமெரிக்க விமானங்களும்,உலங்கு வானூர் திகளும் சரமாரியாகக் குண்டு களை வீசின.அதில் 77 பேர் பலி யானார்கள். 70 பேர் வரை காய மடைந்தார்கள். உயிர்ப்பலி இன்னும்அதிகளவில் ஏற்பட்டி ருக்கலாமென எதிர்பார்க் கப்படுகிறது. இந்தப் போரில் 3800 அமெரிக்கப்படையினரும் மற்றும் ஈராக் அரசுப்படையினரும், சுமார் 1000 மெக்தி படைப்பிரிவினரும் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே சியா பிரிவு மதத் தலைவர் அல்சதாரின் மெக்தி படையினர் நபிகள் நாயகத்தின் பேரரான இமாம்அலியின் நினை விடத்தில் தான் அதிகளவில் பதுங் கியுள்ளனர். அதையடுத்துப் பழங் கால கல்லறைப் பகுதியிலும் அவர்கள் நிலைகொண்டுள்ளனர்.

இந்த இடங்கள் மீது குண்டுத் தாக்குதல்நடத்தினால் உலக அளவில் முஸ்லிம்களின் வெறுப் பைச் சம்பாதிக்க வேண்டி யிருக்கும் என்பதால் அமெரிக்கா அங்குதாக்குதல் நடத்தத் தயங்குகிறது. புனித இமாம் அலியின் நினைவிடத்திற்கு 400 மீற்றர்தூரத்தில் அமெரிக்க இரா ணுவடாங்கிகள் நிறுத்தப்பட்டு ள்ளன.

நினைவிடத்தின் அருகே நேற்று முன்தினம் கடும் சண்டை நடந்தது. இதனிடையே இமாம் அலி நினை விடத்தை விட்டு சதாரின் படைகள் வெளியேறத்தயாராகின. நினை விடத்தின் சாவியை ஈராக்கின் சியா மதப்பிரிவின் முக்கிய தலைவரான அல்-சிஸ்தானியிடம் அவர்கள் ஒப்ப டைத்ததாக தகவல் வெளியானது.

புனித இமாம் அலி நினைவிடம் தற்போது தங்கள்வசம் வந்து விட்டதாக ஈராக் அரசுப் படைகள் நேற்றுமுன்தினம் தகவல் வெளி யிட்டுள்ளன.

ஈராக்கிலுள்ள பலூஜா நகரிலும் நேற்று முன்தினம் சியா பிரிவுப் படைகளுக்கும், அமெரிக்கப்ப டைகளுக்கும் இடையில் கடும் சண்டை நடந்தது. அமெரிக்க விமா னங்கள் இந்த நகரின் மீது குண்டு களை வீசித்தாக்கின.



நேபாளம் காத் மண்டுவில் கல கக்காரரினால் கைது செய்யப் பட்ட கெரில் லாக்களை விடு தலை செய்யக் கோரி அழுத்தம் கொடுக்க தலை நகரில் போக்கு வரத்துத்தடை, கடைபூட்டு போ ன்ற தடைகள் மேற்கொள்ளப் பட்ட நான்காவது நாள் மரக்கறிச் சந்தையில் திரண் டிருக்கும் மக்கள்.

# 3000 வெளிநாட்டவருக்கு நிரந்தர வசிப்பிட அனுமதி

## சீனா வழங்கியது

(பீஜிங்)

உயர்திறன் மிக்க, வெளி நாட்ட வர்கள் 3000 பேர் சீனாவில் நிரந்தர மாகத் தங்கியிருக்க அனுமதி வழங்கியுள்ளது சீன அரசு. வெளி நாட்டு முதலீடு, தொழில்நுட்பத்தை ஈர்க்க இந்த நடவடிக்கையை அது மேற்கொண்டுள்ளது. கிரீன் கார்டு என்ற பெயரில் இந்த வசதி அளிக் கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஓகஸ்ட் 15 முதல் அமுலுக்கு வந்துள்ளது. இதன்படி சீனாவில் நிரந்தரமாக வசிக்கவிரும்பும் வெளிநாட்டவர் அதற்காக மனுச் செய்யலாம். பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பத்தில் சீனா மேம்பாடு அடைய உதவக்கூடிய தொழிற் றுறைகளில் முக்கிய பதவி வகிக் கும் வெளிநாட்டவருக்கு இத் திட்டத்தில் முன்னுரிமை தரப்படும். அந்நியர் நிரந்தரவசிப்பிட அனும தியானது மைனர்களாக இருந்தால் 5 ஆண்டுகளுக்கும், வயது வந் தோராக இருந்தால் 10 ஆண்டு களுக்கும் செல்லுபடியாகுமென்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சக அதிகாரி ஹாவ் ஷியாங் நிருபர் களிடம் தெரிவித்தார். இந்த அட்டைமற்றும் கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) இருந்தால் மட்டும் போதும். விசா இல்லாமலே சீனா வரலாம். ஊர் திரும்பலாம்.

# பாகிஸ்தான் இராணுவத்தைப் பலப்படுத்துவது அமெரிக்காவின் முதன்மைப்பணியாக இருக்கும்

## கிறிஷ்ரினா றோக்கா



(வோஷிங்டன்)

**பாகிஸ்தான் இராணுவத்தைப் பலப்படுத் துவது அமெரிக்காவின் முதன்மையான முன்னுரிமைப்பணி என்று தெற்காசிய விவகாரங்களுக்குப்பொறுப்பான அமெரிக்க அதிகாரி கிறிஷ்ரினா றோக்கா தெரிவித்துள் ளார்.**

“இந்தியாவிற்கும் பாகிஸ் தானிற்குமிடையே சமாதானம் ஏற் படுவதை அமெரிக்கா ஊக்குவித்து வருகிறது. இருநாடுகளுக்கு மிடையே நல்லுறவுஏற்பட்டால், அப்பகுதியில் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் குறைய வழி ஏற்படும்” என்றும் அந்த அதிகாரி தெரிவித் துள்ளார். அமெரிக்கவெளியுறவு அமைச்சகத்தில்தெற்காசிய விவ காரங்களுக்குப்பொறுப்பான உதவிச் செயலாளராக இருப்பவர் கிறிஷ்ரினா றோக்கா. அப்பகுதி நிலவரம் குறித்த அறிக்கையை அமெரிக்க பாராளுமன்றக் குழு விடம்வியாழக்கிழமை நேரில் அளித்தார் கிறிஷ்ரினா. அப்போதே மேற்சொன்ன கருத்துக்களைத் தெரிவித்தார். அவர்மேலும் கூறி யதாவது;

பாகிஸ்தானுக்கு ஆண்டுக்கு ரூபா 2760 கோடி வீதம் 5 ஆண்டுக ளுக்கு நிதியுதவி அளிப்பதாக அதிபர் புஷ் உறுதியளித்துள்ளார். அதில் 50 சதவீதத் தொகை இரா ணுவ உதவியாகவும், 50 சதவீதத் தொகை பொருளாதார உதவி யாகவும் இருக்கும். பயங்கரவா தத்திற்கு எதிராக பாகிஸ்தான் எடுத்த நடவடிக்கைகளின் பயனாக, அமெரிக்காவிற்கு உபயோகமுள்ள பல தகவல்கள் கிடைத்துள்ளன. அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் செய்துவரும் சதிகள் குறித்த தகவல்கள் கிடைத் தன. அமெரிக்கா மீது பயங்கர வாதிகள் தாக்குதல் நடத்தியதை யடுத்து, பாகிஸ்தானுக்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான உறவில் புதிய நெருக்கம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானின் உதவி இல்லாமலிருந்திருந்தால், ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா வெற்றிபெறுவது மிகவும் கடின மானதாகவும், பெரும் நட்டத்தை ஏற்படுத்துவதாகவும் இருந் திருக்கும். எனவே பாகிஸ்தானின் இராணுவத்திறனைப் பலப்படுத்து வது அமெரிக்காவின் முதன்மை முன்னுரிமைப் பணியாகும். அத னுடன் நீண்டகால உறவை வளர் க்க விரும்புகிறோம். அதற்கு ஏற்ப பாகிஸ்தானின் இராணுவத் தே வைக்கு உதவவேண்டும் என்றார் கிறிஷ்ரினா றோக்கா.

# மலேசியாவில் பறவைக் காய்ச்சல்

(கோலாலம்பூர்)

மலேசியாவில் பறவைக் காய் ச்சல் பரவியுள்ளது. இத்தகவலை அரசு வட்டாரங்கள் வியாழக் கிழமை தெரிவித்தன. பறவைகளின் கொள்ளை நோயாகத் திகழ்கிறது இந்தக் காய்ச்சல். மலேசியாவின் வடகிழக்கே உள்ள கெலன் தான் மாகாணத்தில் உள்ள கிராமம் ஒன்றில் நடத்தப்பட்ட சோதனையில் காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸ் நோய்க் கிருமி கோழிகளைத் தொற்றியுள்ளதாகத் தெரிய வந்து ள்ளது.

எனவே அந்தப் பகுதி முழு வதும்தனிமைப் படுத்தப்பட்டு ள்ளது. கோழி,வாத்து போன்ற பற வைகளை அங்கிருந்து வெளியே கொண்டுசெல்வது தடைசெய்யப் பட்டுள்ளது. பறவைக்காய்ச்சல் பரவியுள்ளதால் மலேசியாவின் கோழிப்பண்ணைத் தொழிலுக்கு பெருத்தஅடிஏற்பட்டுள்ளது அண் டை நாடான சிங்கப்பூர், தினசரி 1.25 லட்சம் கோழி, 20ஆயிரம் வாத்துக்களை மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்துவந்தது பற வைக் காய்ச்சல் காரணமாக இறக் குமதிக்குத் தடைவிதித்துள்ளது சிங்கப்பூர்.

# பின்லேடனின் கார் ஓட்டுநர் கைது; பாகிஸ்தான் மறுப்பு தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில், சர்வதேச பயங் கரவாதி பின்லேடனின் கார் ஓட்டு நர் பிடிபட்டதாக செய்திகள் வெளி யாகி உள்ளன. இந்த செய்தியை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

ஒரு பத்திரிகை ஓசாமாவின் ஓட்டுநர்தான் பிடிபட்டார் 'என்று செய்தி வெளியிட்டது. இன்னொரு பத்திரிகைசமையல்காரன் தான் பிடி பட்டார். அவர்கடந்த 2 ஆண்டு களாக ஒரு மதரசாவில் பதுங்கி இருந்தார் என்று பிரசுரித்திருந்தது.

இந்த செய்திகளை பாகிஸ் தான் உள்துறை மந்திரி பைசல் சலேக்ஹயாட் மறுத்திருக்கிறார்.

இதற்கிடையில் பெஷாவர் நகரில் அரபு நாட்டைச் சேர்ந்த 2 அல 'கொய்தாதீவிரவாதிகளை பொலிசார் கைதுசெய்தனர். அந்த இருவரும்பொலிசார் மீது கை எறி குண்டுகளை வீசித்தாக்கினர். அவர்கள் ஒரு காரில் சென்ற போது இராணுவ வீரர்கள் துப்பாக் கியால் சுட்டனர். இதில் ஒருவர் காயமடைந்தார். அவரை பொலி சார்கைதுசெய்தனர் இன்னொ ருவர் தப்பியோடி விட்டார்.அவ ரை இராணுவம் ஹையதாபாத்தில் கைது செய்தது. காயம் அடைந் தவர் பெயர்முகமதுபவுஜிஅவர் அல்ஜீரியாவைச் சேர்ந்தவர், மற்றையவர் ஈராக்கியர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பவுஜி ஹயதாபாத் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

# வாலுடன் பிறந்த குழந்தை

(நாம்பெங்)

கம்போடியா நாட்டில் 10 செ.மீ நீளமுள்ளவாலுடன் ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது.

அங்குள்ள ஸ்வேரீங் மா நிலத் தில்சோக்மாவோ என்ற 36 வயதுப் பெண்ணுக்கு இப்படிஅதிசயக் குழந்தை பிறந்துள்ளது

இந்தக் குழந்தையைக் காண் பதற்கு பெரும்கூட்டம் கூடிவிட்டது. வெளி ஊர்களில் இருந் தெல்லாம் மக்கள்இந்தக் குழந்தையைக் காண வருகிறார்கள். அவர்கள் எல்லாம் குழந்தையைப் பார்த்துவிட்டு காணிக்கை செலுத்திவிட்டுச் செல் கிறார்கள் என செய்தி நிறுவனம் ஒன்று கூறுகிறது.



செய்ரி இன அடிப்படைவாத மதகுரு மொக்தாடா சதாரின் ஆதர வாளர்கள் நஜாப்புனித நகரின் இமாம் அலி புனிதத்தலத்தினுள் இருக்கின்றனர்.



சதார் நகர சுற்றுப்புறத்தில் அடிப்படை மதவாத மதகுருமொக்தாடா அல்சதாரின் அலுவலகத்திற்கு அண்மையாக தனது மகனுடன் காவற் கடமையில் நிற்கும்ஈராக்கிய செய்ரிஇனமுஸ்லிம் இராணுவவீரர்.

# நாளாந்தம் 50 ஆயிரம் கிலோ நெல்லை குற்றும் நவீன அரிசி ஆலை திறப்பு

(வட்டக்கச்சி)

நாளொன்றிற்கு ஐம்பதாயிரம் கிலோ நெல்லை அரிசியாக்கும் நவீன ஆலைத் தொகுதியொன்று நேற்று முன்தினம் கிளிநொச்சி வட்டக்கச்சிப் பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்டது.

கல்மடுநகர்ப் பகுதியில் சேரன் நிறுவனத்தினரால். இவ் ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

நண்பகல் 12.00 மணிக்கு வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு முன்பாக கிளி/ மாவட்ட அரச அதிபர் மற்றும் திணைக்களத்தலைவர்கள், விவசாய சம்மேளனத் தலைவர்கள், விவசாயப் பெருமக்கள் போன்றவர்களை மங்கல வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் அகவணக்கத்துடன் ஆரம்பமாகியது.

தேசியக் கொடியை நிதித்துறை நிர்வாகப் பொறுப்பாளர் அகச்சுடர் ஏற்றிவைக்க, மங்கல விளக்கினை நிதி பொறுப்பாளர் பாலதாஸ் வன்னிவேளாண் தொழில்நுட்ப பணிப்பாளர், இளவேனில் பணிப்பாளர் யாழவன் கல்மடுநகர் கிராம சேவையாளர் தெய்வ வேற்பரமநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து அதிநவீன அரிசி ஆலையினை கிளி/ மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். மற்றும் முதலாவது பொறியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் கரிகாலன் இயக்கி வைத்தார்.

நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் கிலோ நெல்லை அரிசியாக்கும் வலுவுடைய இவ் அரிசி ஆலையில் நெல்லை உடைத்து அரிசியாக்கும் போது 100 சதவீத உத்தரவாதத்துடன் சுகாதார முறைப்படி தயாரிக்கப் படும் .

திறப்பு விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஒவ்வொரு அரிசிப்பொதி வழங்கப்பட்டது. நிறைவாக நன்றி உரையினை வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனப் பொதுமுகாமையாளர் புவனேஸ்வரன் வழங்கினார். (12)



புதுக்குடியிருப்பில் கடும் வரட்சியால் கிணறுகளில் நீர் வற்றியுள்ளதால் சிறுவர் முதல் முதியோர் வரை புதுக்குடியிருப்பு கேப்பாப்புலவு வீதியில் பேராற்றில் குளிப்பதையே படத்தில் காண்கின்றீர்கள். (படப்பிடிப்பு—தவரட்ணம்)

# உப்பாறில் மீள்குடியமர நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபரிடம் கோரல்

## -297 குடும்பங்கள் தொடர்ந்தும் நிர்க்கதி

(திருமலை)

**கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உப்பாறு கிராமத்திலிருந்து வெளியேறி அகதிகளாகவுள்ள 297 குடும்பங்களும் மழை காலம் ஆரம்பிக்கும் முன்னர் தங்களை மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு திருமலை மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.**

ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் கிண்ணியா பிரதேச செயலகத்தில் மே மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது தங்களை ஜூலை 2ஆம் வாரத்தில் மீளக் குடியேற்றுவதாக கிண்ணியாப் பிரதேச செயலாளரால் அளிக்கப்பட்ட வாக்குறுதி இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லையென அகதிகள் விசனம் தெரிவித்துள்ளனர். இருப்பிடங்களைத் துப்புரவு செய்யச் சென்ற அகதிகளைச் சிலர் அச்சுறுத்தி கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். அத்துமீறிக் குடியேறிப் பயிர்ச் செய்கையிலும், கால் நடை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ள சிலரே இவ்வாறு அச்சுறுத்திப் பொய்ப் பிரச்சாரம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தையல் பயிற்சி ஆரம்பம்

(புதுக்குடியிருப்பு)

முல்லை மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தால் நடாத்தும் தையல் பயிற்சி ஆரம்ப நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி கற்சிலை மடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில், முல்லை. மாவட்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரி சண்முகவடிவேல் தலைமையில் இடம்பெற்றது. (08)

# நாச்சிக்குடாவில் இரு நாள் திறனுயர்வுப் பயிற்சிநெறி

(அலுவலக செய்தியாளர்)

கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர்களுக்கான திறனுயர்வுப் பயிற்சி நெறி UNDP நிறுவன அனுசரணையுடன் நாளையும், நாளை மறுநாளும் நாச்சிகுடாக் கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நாளைய கருத்தமர்வில் கிராமிய மட்ட அமைப்புக்களின் செயல் திறன் விருத்தி, கூட்டுறவுச் சட்ட நடைமுறைகளும் கடற்றொழிலாளர் சங்கம், தொடர்பாடல் நுட்பங்கள், முரண்பாடுகளை முகாமை செய்தல், திட்டமிடல் நுட்பங்கள் போன்ற தலைப்புக்களின் கீழ்க் கருத்துரை இடம்பெறவுள்ளது. நாளை மறுதினம் கருத்தமர்வில் நிறுவனங்களைப் பலப்படுத்தும் நடைமுறைகள், நுண்திட்ட நிதி முகாமை, ஆளுமையான தலைமைத்துவமும், அதன் பண்புகள், தீர்மான மாதிரியங்கள், கணக்கு வைப்பு முறையும், படிவங்களைக் கையாளுதல் போன்றவிடயங்களின் கீழ் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன. (சோ.கு)

## —பாதசாரிகளுக்கு இடையூறாக—

# பழவியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகளுக்கு அபராதம்

(செட்டிகுளம்)

வவுனியா நகர்பகுதியில் பாதசாரிகளுக்கு இடையூறான முறையில் பழவியாபாரத்தில் ஈடுபட்ட எட்டு வியாபாரிகளின் பழங்கள் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வியாழக்கிழமை நிறுத்தப்பட்டு அவர்களிடம் தலா 100 ரூபா அபராதம் நீதிமன்றினால் அறவிடப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அண்மை நாட்களாக பஸ்தரிப்பு நிலையத்திலுள்ள நடைபாதை வியாபாரிகள் மக்களுக்கும் பஸ்தரிப்பு நிலைய தொடாமாடியிலுள்ள கடைகளின் வியாபார ஸ்தலங்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வதாகவும், வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் பல உயரதிகாரிகளின் கவனத்திற்கும், நீதிமன்றின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்ட பின்னரே நகரசபையினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். வியாபாரிகளுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் வியாபாரம் செய்யுமாறு வியாபாரிகளுக்குத் தெரிவித்தும் அவர்கள் அதனைக் கடைப்பிடிக்கவில்லை என்று வவுனியா நகரசபைச் செயலாளர் தெரிவிக்கின்றார்.

## உதவியளிப்பு

வட்டக்கச்சி மாவடிக் கிராமத்தில் வருமான அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் போரூட் நிறுவன நிதி உதவியுடன் கிளி/கிழக்கு புனர்வாழ்வுக்கழக நிறுவனம் மாவடிக் கிராமத்தில் ஆடு,மாடு போன்ற கால்நடைகளையும், 40 பேருக்கு 200 மட்டைக் கிடுகு விகிதம், 8000 மட்டை கிடுகுகளையும் வழங்க ஏற்பாடாகியுள்ளது 28 ஆம் திகதிக்கு முன்பாக இவை வழங்கப்படும். (12)



புதுக்குடியிருப்பில் உள்ள அரசினர் வைத்தியசாலையின் வேலி நீண்ட காலமாக விழுந்து கவனிப்பாரற்ற நிலையில் உள்ளதைப் படத்தில் காணலாம். (படப்பிடிப்பு—தவரட்ணம்)

# யுனிசெப் நிதியுதவியுடன் நடைபெறும் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வு

யுனிசெப் அமைப்பின் நிதிஉதவியுடன் முல்லை மாவட்டத்தில் 2002,2003,2004 தொடக்கம் நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டம் தொடர்பாக ஆய்வுப்பட்டறை நேற்று முன்தினம் காலை 11.00 மணிக்கு முல்லை கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கச்சேரி பிரதித்திட்டப்பணிப்பாளர் குணசிங்கம் தலைமையில் ஆரம்பமான ஆய்வுப்பட்டறையில் கருத்துக்களை கிளி,முல்லை யுனிசெப் பிரதிநிதி பென்னிறுனேக்கா, வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர், த.பு.க.சமூகப்பணிப் பொறுப்பாளர், றிடோ திட்ட இணைப்பாளர்கள் ஆகியோர் வழங்கினர்.

இதில் பிரதித்திட்ட பணிப்பாளர் பணிமனைப் பணியாளர்கள்,யுனிசெப் பிரதிநிதிகள், பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனப்பிரதிநிதிகள், பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிமனை நிர்வாக அலுவலர் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன் போது 2004 ஆம் ஆண்டு திட்டங்கள் செயற்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (20)

# ஐவர் தாயகம் திரும்பினர்

தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த 5 ஈழத்தமிழர்கள் தாயகம் திரும்பியுள்ளனர். படை நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து தமிழ்நாட்டின் கரூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்து வந்த மக்களே தலைமன்னார் ஊடாகத் தாயகம் திரும்பியுள்ளனர். இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த வியாழனன்று தலைமன்னார் வந்த இவர்கள் சிறிலங்காப் பொலிசார் ஊடாக மன்னார் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். இதனை அடுத்து அவர்கள் தமது சொந்தப் பகுதிகளுக்கு மன்னார் நகரக் கிராம அலுவலர் ஊடாகச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இந்த மக்கள் யாழ்ப்பாணம் சாவகச்சேரி, வவுனியா மணிபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். (32)

# பல்லவராயன்கட்டு–வலைப்பாடு வீதியை புனரமைக்க மக்கள் வேண்டுகோள்

பல்லவராயன் கட்டில் இருந்து கிராஞ்சி ஊடாக வலைப்பாடு வரையுள்ள பிரதான வீதியை திருத்தி அமைக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேற்கூறப்பட்டுள்ள பாதையானது நீண்ட காலமாக திருத்தியமைக்கப்படாமல் கவனிப்பாரற்று கிடப்பதனால் அப்பகுதியில் வாழும் மக்கள் சொல்லொணா கஷ்ரத்தை அனுபவித்து வருகின்றனர். ஆகவே இப்பாதையை திருத்தியமைத்து இப்பகுதியில் வாழும் சுமார் இரண்டாயிரம் குடும்பங்களின் போக்குவரத்துக் கஷ்ரத்தை நிவர்த்தி செய்ய, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# முல்லை. மாவட்ட தபால் சேவைகள் சீராக நடைபெறுவதாகத் தகவல்

(முல்லை)

முல்லை மாவட்டத்தில் தபால் சேவைகள் தற்போது துரிதமாக நடைபெறுகின்றது என முல்லை மாவட்ட தபால் அத்தியட்சகர் குமரகுருபரன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தபால் சேவைகள் சரியான முறையில் நடைபெறாது இருந்தது. தற்போது கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் பேருந்து, தமிழீழ போக்குவரத்துக்கழக பேரூந்து போன்றவற்றின் உதவியினால் தபால் சேவை துரிதமாக நடைபெறுகின்றது.

அத்துடன் உடைந்து சிதைந்திருந்த தபால் சேகரிப்புப் பெட்டிகள் புனரமைக்கப்பட்டு அதனுள் தபால் சேகரிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (20)

# புகலிடம் மறுக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டோருக்கு புனர்வாழ்வளிக்கும் சாத்தியம் குறித்து ஆராய்வு

## ~ ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

**புகலிடவிண்ணப்பங்கோரி நிராகரிக்கப்பட்டு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட ஈழத்தமிழரது நிலைமையினை மேம்படுத்துவது தொடர்பாக ஆராய, ஐரோப்பிய யூனியன் அமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளது.**

பற்றைஸ் லெப்ரி மற்றும் ஜீன் லாவ் ஆகிய இருவரையும் உள்ளடக்கிய ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் குழுவே குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டது.

அரசியற்தஞ்சம்கோரி நிராகரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் திருப்பியனுப்பப்பட்டவர்களின் நலன்களைப் பேணுவது தொடர்பாகவும், அவர்களுக்கான வேலை வாய்ப்புக்கான உதவிகள் பற்றி ஆராய்வதற்காகவுமே இக்குழு விஜயம் செய்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

இதனிடையே யாழ்.செயலகத்தில் இயங்கிவரும் மனிதவள தகவல் தொழில் நுட்ப மையத்தின் செயற்பாடுகளைச் சீரமைப்பதன் மூலம் திருப்பி அனுப்பப்பட்ட அகதிகளுக்கான உதவிமையம் ஒன்றை ஏற்படுத்துவதிலும் அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்.செயலகத்துக்கு விஜயம் செய்த மேலதிக அரசாங்க அதிபர் க.சிவசாமியைச் சந்தித்துப் பேச்சு நடாத்திய பிரதிநிதிகள் ஐ.ஓ.எம். எனப்படும் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு நாடு திருப்பப்பட்டவர்களுக்கான சர்வதேச அமைப்பின் யாழ். அலுவலகத்திற்கும் சென்று கலந்துரையாடினர். (27,33)

# இடை விலகிய மாணவர்களுக்கு மறுவாழ்வளிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளை விட்டு இடைவிலகிய மாணவர்களுக்கான மறுவாழ்வு அளிக்கும் திட்டம் ஒன்று யாழ்.குடாநாட்டில் துரிதமாக நடைமுறைக்கு வரவுள்ளது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மற்றும் இடப் பெயர்வுகள் என்பவற்றால் ஏற்பட்ட வறுமைகாரணமாக தமது பாடசாலைக்கல்வியை இழந்த மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களினை மீண்டும் பாடசாலைகளில் இணைத்து அவர்களின் கல்வி மேம்பாடுகளுக்கு உதவுதல், பாடசாலைகளிலிருந்து இடைவிலக வேண்டிய நிலையில் உள்ள வறுமைப்பட்ட மாணவர்களுக்கான உதவிகளைச் செய்தல் என்பன உட்பட பல விழிப்புணர்வு நடவடிக்கைகளும் இத்திட்டத்தின் கீழ் நடைமுறைக்குவரும்.

இத்துரித அமுலாக்கலில் யாழ். மாவட்டத்தில் உள்ள வலயக்கல்விப் பணிப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர், ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியன இணைந்து செயற்படும்.(33)

# லெப்.கேணல் ராஜனின் 12–ம் வருட நினைவு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சாள்ஸ் அன்ரனி படையணியின் முன்னாள் தளபதியான லெப்.கேணல் ராஜனின் 12ஆவது ஆண்டுநினைவு தினம் எதிர்வரும் 27ஆம் திகதி மிகச்சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அந்தவகையில் இம் மாவீரனது சொந்த இடமும், வீரச்சாவடைந்த இடமுமான மாதகலில் விசேட வீரவணக்கம் மற்றும் நினைவுதின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 27ஆம் திகதி மாலை 4மணியளவில் மாதகல் விநாயகர் ஆலய முன்றலில் இடம் பெறவுள்ள இவ்விசேட நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளைத் தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் பொது அமைப்புக்கள் மேற்கொண்டுள்ளன. (33)

# அம்பியூலன்ஸ் சாரதி இல்லை அவசர சேவைகள் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊர்காவல் துறை வைத்தியசாலையின் அம்பியூலன்ஸ் வண்டியின் சேவைகள் பெரிதும் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

மேற்படி வைத்தியசாலைக்கென ஒரு அம்பியூலன்ஸ் வண்டி உள்ள போதிலும் அதனை ஓட்டுவதற்குச் சாரதி ஒருவர் நியமிக்கப்படாமையாலேயே இவ் வைத்தியசாலையின் அம்பியூலன்ஸ் வண்டியின் சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதன் காரணமாக அவசர சிகிச்சைக்காக ஊர்காவல்துறை வைத்தியசாலையில் இருந்து யாழ் வைத்தியசாலைக்கு நோயாளர்களை எடுத்து வருவதில் பல்வேறு விதமான இடர்பாடுகளும் காணப்படுகின்றன.

இது குறித்துப் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை என வைத்தியசாலையின் நிர்வாகத்தினர் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# ஈ.பி.டி.பி யினருக்கு குடாநாட்டில் இராணுவப் பாதுகாப்பு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள ஈ.பி.டி.பி.யினருக்கான இராணுவப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஈ.பி.டி.பி யினரின் யாழ்.மாவட்ட தலைமைக் காரியாலயமான யாழ்.ஸ்ரீதர்திரையரங்கக் கட்டடத்திற்கான இராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் மேற்படி கட்டடத்தினைச்சூழ புதிய காவலரண்களை நிறுவி, அதில் இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் செல்லும் வாகனங்களுக்கு இராணுவத்தினரது முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (33)

## - யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற -

# ஒழுக்காற்று விசாரணைக் குழுத் தெரிவில் உரிய நடைமுறைகளை பின்பற்றக் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஒழுக்காற்று விசாரணைகளுக்கான விசாரணையாளர் குழுவிற்கான தெரிவில் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லையென பல்கலைக்கழக ஊழியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

அத்தோடு, உடனடியாக இக்குழுவை சீர்செய்யுமாறும் அது கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்த ருக்கு இச்சங்கம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஒழுக்காற்று விசாரணைகளுக்கான விசாரணையாளர் குழுமத்துக் கென விசாரணையாளர்களைத் தேர்ந்தெடுக்கும் போது தொழில் வாழ்விலும், பொதுவாழ்விலும், சட்டம், ஒழுங்கைப் பேணி நடப்பவர்களையும், நேர்மையான நடத்தை உடையவர்களையுமே தேர்ந்தெடுத்தல் வேண்டும்

அரச பொது நிறுவனங்களில், பணியாற்றியவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவர்களின் பணிக்காலத்தின் நடத்தைகள் பரிசீலிக்கப்படவேண்டும்.குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்களுக்கும், தண்டனைக்குட்படுத்தப்பட்டவர்களுக்கும் இக்குழுமத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும். இது பற்றி ஒழுக்காற்றுக் கோவையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் எமது பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தெரிவின் போது இந்நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படாதது தவறானதும், கண்டனத்துக்குரியதுமாகும்.

தயவுசெய்து உரியவகையில் விசாரணைக்குழுமத்தைச் சீர் செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறோம் என்று கூறப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் செயலாளர் கல்வி அமைச்சின் உயர்கல்விப் பகுதி, செயலாளர் பொது நிர்வாக அமைச்சு, தலைவர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, தலைவா அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர்—தொழிற் சங்க சம்மேளனம், தலைவர் பல்கலைக் கழக ஆசிரியர்சங்கம், யாழ்.பல்கலைக்கழகம், தலைவர் பல்கலைக கழக மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழகம், கணக்காய்வாளர் நாயகம், அரச கணக்காய்வாளர் திணைக்களம் என்பனவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.



கைதடி அரச முதியோர் இல்ல புதிய விடுதி மற்றும் அரச சிறுவர் இல்ல புதிய கட்டடம் நேற்று முன்தினம் முறையே சாவகச்சேரி பிரதேச செயலாளர் செ.ஸ்ரீனிவாசனாலும், மாகாண சமூக நலத்துறைப் பணிப்பாளர் திருமதி ரஞ்சினி நடராஜப்பிள்ளையினாலும் திறந்து வைக்கப்படுவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: செல்வா)

# துரித வீடமைப்புத் திட்டத்தின் ஊடாக 21 ஆயிரம் வீடுகள் அமைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உலக வங்கியின் துரித வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மேலும் 21 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

கடந்த கால யுத்த அழிவுகளால் பாதிக்கப்பட்டு அடிப்படை வசதிகள் அற்ற தற்காலிக வாழ்விடங்களில் வாழ்ந்துவரும் மக்களினது நலனைக் கவனத்தில் கொண்டே உலக வங்கி இவ் வீட்மைப்புத் திட்டத்தை அமுல்செய்யவுள்ளது.

கட்டம்கட்டமாக நடைமுறைக்கு வரவுள்ள இத்திட்டம் முன்னுரிமை அடிப்படையிலேயே அமுல்செய்யப்படும். (33)

# இருபாலையில் வெடிபொருள் அகற்றும் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இருபாலைப்பகுதிகளில் படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிபொருட்களை அகற்றும் நடவடிக்கைகளை "ஹலோட் ரெஸ்ட்" வெடிபொருள் அகற்றும் நிபுணர்கள்குழு மேற்கொண்டு வருகிறது. மேற்படி பகுதிகளில் உள்ள பொதுமக்கள் வாழ்விடங்களை அண்மித்தும், விவசாய நிலங்களிலும் படையினரால் வெடிபொருட்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்ததனால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கவனத்தில் கொண்டே இங்கு மிதிவெடி அகற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(33)

# மருத்துவ அதிகாரிகளுக்கு யாழ்.இல் பாரிய வெற்றிடம்!

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு பாரிய அளவில் வெற்றிடம் நிலவிவருவதாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சிவபாதம் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டிற்கு 88 சுகாதார மருத்துவ அதிகாரிகள் தேவையாகவுள்ள நிலையில் 7 பேர் மட்டுமே கடமையில் உள்ளனர்.

இதனால் மக்கள் மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (32)

## தளபாடம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்விவலய பாடசாலைகளான கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், அரியாலைஸ்ரீ பராசக்தி வித்தியாலயம், வண்ணார் பண்ணை நாவலர் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலை களுக்கு முதற் கட்டமாக ஒரு தொகுதி வகுப்பறைத் தளபாடங்களை நிக்கொட் நிறுவனம் வழங்கியுள்ளது. (33)

தமிழக அரசைச் சுற்றி பிரச்சினைகள் இறுக ஆரம்பித்துள்ளன. நாளுக்கு நாள் அரசை திகிலூட்டும் சம்பவங்கள் பூதாகரமாகி வருகின்றன. எப்படி இவற்றைச் சமாளிப்பது...? எனும் விழி பிதுங்கும் நிலையில்தான் தமிழக அரசு திண்டாடிக்கொண்டிருக்கின்றது என்றால் மிகையில்லை.

இந்த வகையில் தமிழக அரசு எதிர்நோக்கும் சிக்கல்களில் தற்போது சிகரமாக

சிறிய தொகையல்லவே... இதனை எதிர்க்கட்சிகள் பழம்நழுவி பாலில் விழுந்த தாக்த் தமிழக முதலமைச்சரை வறுத்தெடுக்க ஆரம்பித்துவிடும்.

அது மட்டுமென்றால், தமிழக முதலமைச்சர் உச்சஸ்தாயியில் கோபப்பட்டிருக்கமாட்டார். ஆனால், சட்டமன்றத் தேர்தலுக்குத் தயார்ப்படுத்தி வரும் நிலையில் இத்தகைய நெருக்கடி நிலைவரத்தை

விடத்தான் என்பது பாரதிய ஜனதாவின் எதிர்க்கட்சிகள் முதல் தமிழக ஆளும் அ.தி.மு.க. வரை நிலவும் குற்றச்சாட்டாகும்.

அந்த வகையில் பார்க்கும் போது தி.மு.க. தலைவரின் காய்நகர்த்தலின் ஒரு பகுதி யாகவே தணிக்கை அறிக்கைப் பேட்டியைத்தமிழகக்கணக்காய்வுத் துறைத் தலைவர் வெளியிட்டுள்ளதாக தமிழக முதலமைச்சர் குற்றச்சாட்டை முன்வைத்து

அந்த வகையில்தான் தமிழக மக்களை மகிழ்விக்கும் விதத்தில் சட்டங்களையும், சலுகைகளையும் ஏற்றவிதத்தில் மாற்றியமைத்தார். மத்தியரசின் கடைக்கண்பார்வை தம்மீது விழுந்துவிடக் கூடாது என்பதில் அக்கறை காட்டியும் செயற்பட்டார்.

ஆனால் எல்லாவற்றையும் தமிழக கணக்காய்வு தணிக்கைத் தலைவர் நீத்த

# அடிக்கு மேல் அடியென்றானால்



அவர் எதிர்பார்த்திருக்கச் சந்தர்ப்பமே இல்லை.

அதனால்தான், தமிழக அரசை தமிழகக் கணக்காய்வு தணிக்கைத் தலைவர் சிறுமைப்படுத்தி விட்டதாக அவர் மீது வழக்குத்தாக்கல் செய்திருக்கின்றார்.

இதேவேளை, தமிழக அரசின் நெருக்கடி நிலையை இந்தியப்பத்திரிகைகள் அனைத்தும் தமக்கு சாதகமாகப் பயன்

அமைந்திருப்பது தமிழக கணக்காய்வுத் தணிக்கைத் தலைவர் நீத்தனின் பத்திரிகைப் பேட்டிதான்!

இதனை மறுத்துத் தமிழக முதலமைச்சர் பக்கம் பக்கமாக பதிலறிக்கை வெளியிட்டபோதும் இதனைத் தமிழக மக்கள் நம்பமாட்டார்களோ எனும் அச்சம் அவருள் குடி கொள்ளாமலும் இல்லை.

அதனால்தான், தமிழக மக்களைக் கவருவது எப்படி... என்பது பற்றி மிகுந்த சிரமப்பட்டு, வைகோவின் நடைப்பயணத்தைப் போன்ற சாயலில் தாமும் அ.தி.மு.க.வின் சாதனைகளைக் கூறமுற்படுகின்றார்.

எதிர்வரும் 29ஆம் திகதி முதல் தமிழகமெங்கும் அ.தி.மு.க.வின் சாதனைகளை மக்களுக்குக் கூறுவதுடன் துண்டுப் பிரசுரமும் விநியோகம் செய்யப்படவுள்ளது.

அ.தி.மு.க.வின் அரசாட்சியில் ஏற்கனவே 11 ஆயிரம் கோடி ரூபா இழப்பு

**அ.கலைவாணி**

என்று கூறப்படுகையில், தமிழகமெங்கும் அ.தி.மு.க.வின் சாதனைகளைத் தமிழக அரசு கூறப்போகின்றதா... அல்லது 11 ஆயிரம் கோடிரூபா இழப்பை மூடி மறைக்கத் தமிழக மக்களை அவர்கள் சந்திக்கவுள்ளனரா... எனும் சந்தேகம் எழாமல் இல்லை.

கடந்த மூன்றாண்டுகளில் 11 ஆயிரம் கோடி ரூபாய் தமிழக அரசிற்கு இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதுவும் ஜெயலலிதா தமிழக முதலமைச்சராகப் பதவி வகித்த மூன்றாண்டுகளில் தான் பெருந்தொகை இழப்பாகியுள்ளது என்பது தான் தமிழக புதுவை மாநில கணக்காய்வுத்துறை தணிக்கைத் தலைவரின் பேட்டியின் சாராம்சம்.

ஒரு ரூபாவா... இரண்டு ரூபாவா... 11 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு என்பது

படுத்த பின் நிற்கவில்லை. தமிழக முதலமைச்சரை எப்போது பழி தீர்ப்பது என்று காத்திருந்தது போன்றுதான் பத்திரிகைகள் செயற்பட்டுள்ளன.

பத்திரிகைத்துறை என்றாலே விஷம் என்றுதான் தமிழக முதலமைச்சரின் திடமான நம்பிக்கையாக இருக்கவேண்டும். இல்லையேல் ஒரு பத்திரிகை மீதாவது வழக்கு தாக்கல் செய்யாது விட்டிருக்க முடியுமே... பதவியேற்ற மூன்றாண்டுகளில் பத்திரிகைத் துறையை முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு தடவைகூட வறுத்தெடுக்காது விட்டதில்லை.

இதன் பிரதிபலனைத்தான் அவர் தற்போது அனுபவித்துள்ளார். ஏனெனில், தமிழக கணக்காய்வுத் தணிக்கைத் தலைவர் நீத்தனின் அறிக்கையினை சுவாரசியமாகப் பிரசுரித்த பத்திரிகைகள்தான், தமிழக முதலமைச்சரின் மறுப்பு அறிக்கையினை நீள, அகலம் கூடிவிட்டதாகசாக்குபோக்குக் காட்டிப் புறக்கணித்திருக்கின்றமை அவதானிக்கத்தக்கதொன்று.

அதனால்தான், பல கோடி ரூபா செலவில் கணக்காய்வாளரின் பேட்டியை மறுத்து அறிக்கை வெளியிட வேண்டிய அவலம் தமிழக அரசிற்கு ஏற்பட்டது.

உண்மையில் முதலமைச்சர் ஒருவரின் பேட்டி, அறிக்கை... என்பவற்றிற்காக காத்துக்கிடப்பவர்கள் பத்திரிகைத் துறையினர். ஆனால், தமிழக முதலமைச்சரின் மறுப்பறிக்கையினை பிரசுரிக்க மறுத்தமை ஜெயலலிதா மீது அவர்கள் கொண்ட வன்மத்தைத்தான் காட்டுகின்றது. ஏற்கனவே தி.மு.க.தலைவர் கருணாநிதி மத்திய அமைச்சரவையில் ஒரேபிடியாய் சில அமைச்சுப்பதவிகளைப் பெற்றுக் கொண்டது. தமிழக அரசை நிர்க்கதி ஆக்கி

இருக்கின்றார். இதற்குக்காரணம் இருக்கின்றது. நிதியமைச்சின் கட்டுப்பாட்டில் தான் தணிக்கைத்துறை செயற்படு கின்றது. அத்துடன் நிதியமைச்சராக சிதம்பரமும், இணையமைச்சராக பழனிமாணிக்கமும், மத்தியமைச் சரவையில் இடம்பெறுவதும் சந்தேகத்தைத் தோற்றுவிக்கத் தவறவில்லை.

இதையே தான் தமிழக முதலமைச்சரும் உறுதியாக நம்புகின்றார். மத்தியமைச்சரவையில் தி.மு.க. தலைவர் ஒற்றைக் காலில் நின்று சில குறிப்பிட்ட துறைகளை தம்வசப்படுத்தியது தமிழகஅரசை கலைத்துவிடத்தான் என்பது அவரின் வாதம்.

அந்த வகையில் தான் தமிழக கணக்காய்வுப்பிரிவு தணிக்கைத் தலைவரை

னின் பேட்டி தவிடுபொடியாக்கிவிட்டது.

ஏற்கனவே தமிழகத்தில் சரிந்துவரும் தனது இமேஜை முதலமைச்சர் எந்த வழியில் சரிக்கட்டி நிமிர்த்த முடியும். எனும் ஆலோசனையின் முடிவுதான் எதிர்வரும் 29ஆம்திகதி முதல் தமிழகம் எங்கும் அ.தி.மு.க.வின் சாதனைகளை பிரச்சாரமாக ஒலிக்கச்செய்தல் என்பதாகும்.

அந்தவகையில் கடந்த மூன்றாண்டுகளில் அ.தி.மு.க.35 சாதனைகளை புரிந்துள்ளதாக அ.தி.மு.க.வினர் கோஷமிடவுள்ளனர்.

இந்தச் சாதனைப்பட்டியலில் இலவச அன்னதானத்திட்டம், இலவசசேலை வேட்டித்திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம் என்பனவும் உள்ளடங்கி இருக்கின்றது.

ஏற்கனவே தமிழகத்தின் வளர்ச்சியைப்

# "அம்மா" வின் நிலை....

தி.மு.க. கூட்டணியும், மத்தியரமைச்சரவையும் விலைக்குவாங்கி விட்டதாகவும் தமது அரசை நிர்க்கதியாக்குவதே அவர்கள் திட்டம் என்பதும் தமிழக முதலமைச்சரின் பாரதூரமான குற்றச்சாட்டுக்களில் ஒன்று.

ஆனால் தி.மு.க. உள்ளிட்ட தமிழக எதிர்க்கட்சிகள் இதுவரை தமிழக நிதி விபரம்குறித்து கணக்காய்வுத் தணிக்கைத் தலைவரின் பேட்டி குறித்து மௌனத்தைத்தான் கடைப்பிடிக்கின்றன.

ஏனெனில் மக்களால் ஜெயலலிதா அடுத்த சட்டமன்றத் தேர்தலில் ஓரங்கட்டப்படவேண்டும் என்பதுதான் அக்கட்சிகளின் உட்கிடக்கையாக இருக்க முடியும். முக்கிய கட்சிகளான தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் இதனை வெளியே சொல்லாது செயலால் தான் காட்டி வருகின்றன. ம.தி.மு.க. செயலா வைகோ தமிழகம் முழுவதும் நடைப் பயணம் மேற்கொண்டு தமிழக மக்களை சந்தித்தமை இந்த வகைதான் எனலாம்.

ஏற்கனவே மத்தியில் பாரதியஜனதா கூட்டணியின் செல்வாக்குச்சரிந்து காங்கிரஸ் கூட்டணி ஆட்சிப்பீடமேறியதுமே தமிழக முதலமைச்சர் தனக்கான சத்திய சோதனை ஆரம்பம் என்பதை அறிந்திடாமல் இருக்க வாய்ப்பே இல்லை.

அதனால்தான் மத்தியரசிற்கு ஏற்ற விதமாக தமிழகஅரசை நடத்திச் செல்லத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டார்.

பாதிக்கும் பல திட்டங்களை தமிழக அரசு நடத்திவருவதாக விசனங்கள் எழுந்திருக்கின்றன. இவற்றில் தொட்டில்குழந்தைத் திட்டம் மூலம் தமிழக முதலமைச்சர் கலாசாரசீரழிவிற்கு வழிவிடுவதாகவும் விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

இந்த நிலையில் தமிழக அரசின் சாதனைகளை அ.தி.மு.க.வினர் எடுத்துக் கூறவுள்ளனரா..... அல்லது தமிழக அரசு தேவையில்லாத திட்டங்களால் நிதியைப் பாழடித்துக்கொண்டிருப்பதை பறைசாற்றப் போகின்றார்களா....... என்பது தான் தற்போதைய விடைதெரியாத வினா.

"உண்மை உறங்கும்போது பொய ஊர்வலம் வரும்" என்றுதான் தமிழக அரசு தனது சாதனைகளை தமிழகம் முழுவதும் பரப்பப்புறப்படுவதாக தமிழக முதமைச்சர் கூறுகின்றார்..

மத்தியரசும், தமிழக எதிர்க்கட்சிகளும் பொய்ப்பிரச்சாரம் செய்வதாக அதனை முறியடிக்கவுமே தாமும் களமிறங்கி மக்களைச் சந்திக்கவுள்ளதாகவும் தமிழக அரசு கூறுகின்றது.

உண்மையில் எது உண்மை எது பொய் என்பதை தமிழக மக்கள்தான் நிர்ணயிக்கப் போகிறார்கள். அந்தநாள் வெகுதூரமில்லை. உண்மை ஊர்வலம் வந்ததா....... பொய் ஊர்வலம் வந்ததா.....என்பதை 2006 சட்டமன்றத் தேர்தல் நிச்சயம் நிர்ணயிக்கும். அப்போது எல்லாம் தெளிவாகிவிடும் என்று நம்பமுடியும்

## கணினி கற்கை நெறி நிகழ்வில் சான்றிதழ் வழங்கல்

(மல்லாவி)

மு/மல்லாவிமத்திய கல்லூரியில் முறைசாராக் கணினி கற்கை நெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாயன்று பிற்பகல் 3.30 மணியளவில் கற்கைநெறி போதனாஆசிரியர் வே.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

மங்கல விளக்கினை துணுக்காய் கோட்டக்கல்வி அதிகாரி ஆ.சுந்தரமூர்த்தி, துணுக்காய் வலய முறைசாராக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் க.பிறேமச்சந்திரன் ஆகியோர் ஏற்றினார்கள். கருத்துரைகளை மத்தியகல்லூரி அதிபர் திருமதி தேவராசா, பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் புண்ணியநாதன், கோட்டக்கல்வி அதிகாரி ஆ.சுந்தரமூர்த்தி பிறேமச்சந்திரன் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு முதல்மேற்படி கற்கைநெறியை பயின்ற 40 பேரிற்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. மாணவி செல்வி. றெஜினா நன்றியுரை வழங்கினார். மேற்படி நிகழ்வில் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (24)

## ஒன்று கூடல்

(புதுக்குடியிருப்பு)

உடையார்கட்டு வலயத்துக்கு உட்பட்ட ஆலய நிர்வாகிகளுக்கான ஒன்று கூடல் பிரதேச அரசியல்துறைச் செயலகத்தில் புதன்கிழமை உடையார் கட்டு வடக்கு கிராமசேவையாளர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முல்லை.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் மயூரன் கருத்துரை வழங்கினார். ஆலயங்களில் நிர்வாக உறுப்பினர்களும் அப்பகுதி கிராமப்பொறுப்பாளரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (08)

## தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதேச ரீதியிலான சங்கமம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைகளின் சங்கமம் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளது. இன்று வட்டக்கச்சிப் பிரதேசத்தில் மாலை 3.00மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. 25ஆம் திகதி பூநகரியில் மாலை 3.00மணிக்கும், 28ஆம் திகதி விசுவமடுவில் காலை 10.00 மணிக்கும்,29ஆம் திகதி முழங்காவிலில் மாலை 4.00 மணிக்கும், 31ஆம் திகதி பரந்தனில் மாலை 5.00 மணிக்கும் நடைபெறவுள்ளது. கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையில் நிர்வாகக்குழுக் கூட்டம் அண்மையில் மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் காண்டீபன் தலைமையில் அரசியல்துறை மாவட்டப் பணிமனையில் நடைபெற்று இதன் போது மேற்கூறப்பட்ட ஒழுங்கில் பிரதேச ரீதியாகச் கூட்டங்களை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமது உரையின் போது தேசியத்தலைவர் அவர்களின் சிந்தனையில் உருவான தேசிய எழுச்சிப் பேரவையில் இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களும் இணைந்து செயற்படவேண்டும். எதிர்காலத்தில் மாவட்டத்தின் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகள், தமிழீழ முக்கிய நிகழ்வுகள் யாவும் இப்பேரவை மூலமாகவே செயற்படுத்தப்படவுள்ளது. எனவே இதுவரை தெரிவு செய்யப்படாத ஊரகப்பிரதேச எழுச்சிப் பேரவை கிளைப் புனரமைத்துப்புதிதாக அனைத்துத் தரப்பினரையும் இப்பேரவையில் இணைத்துக் கொள்ள வேண்டும். இனிவரும் காலங்களில் அனைத்து நிகழ்வுகளும பிரதேச மட்டத்தில் தான் நடாத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இதன்பின் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதற்கமைய இதுவரை தெரிவு செய்யப்படாதுள்ள ஊரக எழுச்சிப் பேரவை நிர்வாகங்கள் உடன் தெரிவுசெய்யப்பட வேண்டும். பிரதேச நிர்வாகம் புனரமைக்கத் தேவை ஏற்படின் அதனையும் உடன் மேற்கொள்ள வேண்டும்.

எழுச்சிப்பேரவையில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து உறுப்பினர்களும் அதற்கான உறுப்புரிமைப் படிவத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும். இவ்விபரங்களைப் பிரதேசத்ததில் ஆவணப்படுத்துவதுடன் மாவட்டத்திற்கும் ஒருபிரதி அனுப்பிவைத்தல் வேண்டும். இதே சமயம் கிளிநொச்சிப் பிரதேசத்தில் 19 ஆம் திகதியும், அக்கராயன் பிரதேசத்தில் 21 ஆம் திகதியும் எழுச்சிப் பேரவைச் சங்கமம் இடம்பெற்றுள்ளது. (சோ.கு)


# ஆடி அமாவாசைத் தினத்தில் கீரிமலைக்கு...

அ. லோகீசன்

இந்துக்களின் வாழ்வில் நிகழ்த்தப்படுகின்ற சமயச் சடங்கு நடைமுறைகளில் பிதிர்க்கடன் செலுத்துதல் என்பது மிக முக்கியமானதாகும். இந்த வகையில் தம்மைவிட்டுப் பிரிந்து (இறந்து) சென்றவர்களுக்கு பிதிர்க்கடன் செலுத்துகின்ற இடமாக தொன்று தொட்டுக் கீரிமலை விளங்கி வருகின்றது. இத்தகைய சிறப்பைப் பெற்று விளங்குகின்ற கீரிமலை சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் ஆக்கிரமிப்பில் சிக்குண்டு அதன் மகத்துவத்தை இழந்து வருகின்றது.

சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகளால் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கும் பகுதிக்குள் அமைந்திருக்கும் கீரிமலைக் கேணியில் கடந்த பத்து வருடங்களாக இந்துக்களால் பிதிர்க்கடன் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. தற்போது பலத்த கட்டுப்பாடுகளின் மத்தியில் பிதிர்க்கடன் செலுத்துவதற்கு அனுமதிக்கப் படுகிறது.

இந்த நிலையில், இந்துக்களின் சமயச் சடங்கு முறைகளில் வருடம் தோறும் சித்திரை மாதம் வரும் பௌர்ணமி நாள் தம்மைவிட்டு இறந்துபோன தாயாரை நினைந்து விரதம் அனுஷ்டித்து கடன் செலுத்துவதும் அதேபோல வரும் ஆடிமாதம் அமாவாசைத் தினத்தன்று



இறந்துபோன தமது தந்தையர்களை நினைந்தும் விரதம் இருந்து கடன் செலுத்தும் மரபாக தொன்மைக்காலம் தொட்டு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் ஆடி அமாவாசைத் தினத்தன்று கீரிமலைக்குச் சென்று தமது மூதவர்களுக்குப் பிதிர்க்கடன் செலுத்துவதற்கு சிறிலங்காப் படையினர் அனுமதி வழங்கினர். பெருமளவான மக்கள் அங்கு சென்றனர். அவர்களுடன் நாமும் அங்கு சென்றோம். அந்த வகையில் கீரிமலைப் பயணத்தில் எமது பயண அனுபவத்தையும், தாம் அவதானித்த விடயங்களையும் அங்கு தமது கடன் செலுத்த வந்தவர்களின் உணர்வுகளையும் இங்கே தருகின்றோம்.

நேரம் காலை 9.30 மணிக்கு கீரிமலை செல்வதற்காக சிறிலங்காப் படையினர் அனுமதித்த பாதைகளில் ஒன்றான தெல்லிப்பளை ஊடாகக் கீரிமலைக்குச் செல்வதற்காகப் பயணித்தோம். அங்கே தெல்லிப்பளை இராணுவ முன்னரங்கப் பகுதியில் இருந்து உள்ளே செல்வதற்காக சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தது. பெருந்தொகையான மக்கள் இராணுவச் சோதனைகளுக்காக நீண்ட தூரம் வரை காத்துக் கிடந்தனர். நாம் ஒருவாறு இராணுவச் சோதனை நிலையத்தை வந்தடைந்தோம். முதலாவது சோதனை நிலையத்தில் உந்துருளிகளில் பயணிப்பவர்களின் உந்துருளிகள் படையினரால் பலமாக சோதனை இடப்பட்டன. இப்படித்தான் வாகனங்களும் சோதனை இடப்பட்டன. இரண்டாவதாக உடல் சோதனை பொதிச் சோதனை என்பன மேற்கொள்ளப்பட்டன. புகைப்படக் கருவிகள், தொலைத் தொடர்புக் கருவிகள் என்பன கொண்டு செல்வதற்கு தடை விதித்திருந்தது. இராணுவச் சோதனையைத் தாண்டி அடுத்ததாக அனுமதி அட்டை பெறவேண்டும். அங்கு தான் எரிக்கும் வெய்யிலில் பெருமளவானவர்கள் காத்திருந்தனர்.

சிறிலங்காப் படைகளால் தடை செய்யப்பட்ட பொருட்களாக அறிவிக்கப்பட்ட புகைப்படக் கருவிகள், தொலை தொடர்புக் கருவிகள் என்பன ஒரு கொட்டகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

தெல்லிப்பளை முன்னரங்க சோதனை நிலையத்தில் இருந்து கீரிமலைக்குச் செல்வதற்கு துவிச்சக்கரவண்டிகளில் பயணிப்பதற்கும், கால் நடையாகச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் சிற்றூர்திகள், உந்துருளிகள் போன்றவற்றில் பயணிப்பதற்கு மாத்திரம் அனுமதிக்கப்பட்டிருந்தது. எமது மூதவர்களின். அக்கினியில் எரியூட்டிய உடற் சாம்பல் சங்கமித்த எங்கள் மூதவர்கள் இப்போதும் குடியிருப்பதாக நாம் கருதுகின்ற எங்கள் நிலத்துக்குச் செல்வதற்கு இத்தனை கட்டுப்பாடுகள்.

நாம் ஒருவாறு இராணுவ சோதனைகளை நிறைவு செய்து அதியுயர் பாதுகாப்பு வலயத்தினூடாக எங்கள் பயணத்தை ஆரம்பித்தோம். எங்கும் ஓரே பற்றைக்காடாக இருந்தது. சில இடங்களில் மாத்திரம் சிறிய வீதிகள் பிரதான வீதியில் இருந்து அந்தப் பற்றைக் காடுகளின் ஊடாக எங்கோ சென்றது. வீதியின் அருகில் உள்ள பற்றைகள் வெட்டப்பட்டிருந்தது.

காங்கேசன்துறை பிரதான வீதி ஓரமாக இரு மருங்கிலும் மக்களின் வீடுகள் கதவு, யன்னல்கள் இல்லாத நிலையில் பாழடைந்து காணப்பட்டன. சில வீடுகளின் உள்ளிருந்து வேப்பமரங்களும், ஆலமரங்களும் ஓட்டைப் பிரித்துக் கொண்டு மேலே வளர்திருந்தன. வீடுகளின் உள்ளே புற்றுக்களும், கறையான்களும் காணப்பட்டன. வீதியோரத்தைத் தவிர அதனைத் தாண்டி வீடுகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சில வீடுகளில் வீட்டின் முன்னால் அழகுக்காக நாட்டப்பட்ட கடதாசிப்பூமரம் பெருமரமாக வளர்ந்து வீட்டையே மூடியிருந்தது. தப்பியிருக்கின்ற அந்த வீடுகள் அந்தப் பகுதி மக்களின் அப்போதைய பொருளாதார நிலையைப் பறைசாற்றி நின்றது. அந்தளவிற்குப் பெறுமதியான வீடுகளாகவே அவையிருந்தன. வீட்டின் மதில்கள் அனைத்தும் இராணுவத்தால் இடிக்கப்பட்டிருந்தன. அவை சிங்கள இனவெறியர்கள் தமது பாதுகாப்பிற்காக இடித்திருப்பது போலவே தெரிந்தது.

நாம் மாவிட்டபுரம் சந்தியைச் சென்றடைந்தோம். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கப்பால் எவரும் செல்ல முடியாது வீதித் தடை அமைக்கப்பட்டிருந்தது. நாம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்றோம். கோவிலைச் சூழ எங்கும் படையினர். கோவிலின் உள்ளே போனோம். வாசலில் இரண்டு படையினர் சப்பாத்துக் கால்களுடன் நின்றார்கள். கோவிலின் உட்பகுதிகளைப் பார்த்தோம். கோவிலின் வாசல்கள் அத்தனையிலும் படையினர் நின்று கொண்டிருந்தனர். நாம் புனிதமான இடமாகக் கருதிக் கொள்கின்ற ஆலயத்தின் தூய்மையைக் காக்கிச் சட்டை அணிந்து சப்பாத்துக் கால்களுடன் அசிங்கம் செய்து கொண்டிருந்தனர். ஆலயம் புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அதன் தோற்றம் வெளிப் படுத்தியது.

இப்போது மாவிட்டபுரம் சந்தியில் இருந்து திரும்பிக் கீரிமலை் நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். அங்காங்கே வீதி ஓரமாக ஒருசில வீடுகள் தான் இருந்தன. வேறு வீடுகள் இருந்தமைக்கான தடயம் எதுவுமே இருக்கவில்லை.

ஒரு பெரிய கட்டடம் முகடுகள் எதுவும் இல்லாதிருந்தது. அதனுள் படையினர் நின்று கொண்டிருந்தனர். அந்த கட்டடத்தில் பெருமளவு இயந்திரங்கள் பழுதடைந்து கைவிடப்பட்டுக் காணப்பட்டது. வீதி நெடுவிலும் 75 மீற்றர் தூரத்திற்கு ஒரு இடத்தில் வீதியின் இருமருங்கும் ஐந்து படையினருக்குக் குறையாமல் நின்று வீதியால் செல்பவர்களை அவதானித்துக் கொண்டிருந்தனர்.

இப்போது ஒரு பிரமாண்டமான கட்டடம் தெரிந்தது. அதன் மேற்பகுதியில் ஆங்காங்கே பெரும் இடிவுகள் காணப்பட்டது. இதுதான் காங்கேசன்துறை சீமெந்து ஆலை என்பதை ஊகித்துக்கொண்டோம். அதனைச் சூழ சிறிலங்காப் படையினர் முகாம் அமைத்திருப்பதும், காப்பரண்கள் அமைத்திருப்பதும் தெரிந்தது. எத்தனை கட்டடங்களைக் கட்டி எழுப்பிய அந்தத் தொழிற்சாலை இன்று மூச்சிழந்து பிணம்போல இயக்கமின்றிக் கிடந்தது. அதனைப் பார்க்கும்போது எனக்கு விடுதலை கிடையாதா என மன்றாடுவது போல இருந்தது. இவற்றை எல்லாம் தாண்டி கீரிமலைக் கேணியை நெருங்கிக்கொண்டிருந்தோம்.

ஓரளவு விஸ்தீரணமான படைமுகாம் ஆலயத்தின் அருகில் இருந்தது. அதன் முன்னால் படையினர் காவல் காத்துக் கொண்டிருந்தனர். கீரிமலைக்கு பேருந்துகளில் வருபவர்களையும் பாதுகாப்பு வலயத்தில் இருந்து பேருந்தின் இரண்டு கதவுகளிலும் படையினரும் பயணித்தனர்.

கீரிமலைக் கேணிக்குச் செல்வதற்கு முன்னர் ஈழத்துப் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான பிரசித்திபெற்ற நகுலேஸ்வரம் அமைந்திருந்தது. பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான இந்தத் தலம் இடிபாடுகளுடன் காட்சிதந்துகொண்டிருந்தது. ஆலயத்தின் உள்ளே ஆலய புனரமைப்புக்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆலயத்தைச் சூழ சிறுபற்றைகள் வளர்ந்திருந்தது. ஆலயத்திற்குரிய அன்னதான மண்டபம் பராமரிப்பின்றி ஓடுகள் அங்கும் இங்குமாக இருந்தது. கறையான் குடி கொண்டிருந்தது. கதவுகள் எதுவும் காணப்படவில்லை. அதன் சுவர்களில் "மாமிசம் பாவித்தவர்களுக்கு தவிர்க்கப்பட்டுள்ளது" "மாமிசம் பாவிக்காதீர்" என எழுதப்பட்டிருந்தது. ஆனால் அதனருகில் ஒரு சிங்களப் படை நின்றுகொண்டிருந்தான்.

நாங்கள் எமது முன்னோர்கள் சங்கமித்து நீருடன் நீராக வாழ்ந்து கொண்டிருக்கின்ற கீரிமலைக் கேணிக்கு சென்றோம். அங்கு மக்கள் கூட்டமாக குளித்துக்கொண்டிருந்தனர். கேணியை அண்டிய பகுதிகளில் பிராமணர்கள் தனித்தனியாக ஆங்காங்கே அமர்ந்திருந்தனர். இறந்துபோன தமது தந்தையர்களின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தனர். கேணி நிறைந்த மக்கள் அதனைத் தாண்டி கடலை வந்தடைந்தோம். அங்கும் மக்கள் கூட்டம் கூட்டமாக நீராடிக் கொண்டிருந்தனர். அங்கே முதியவர்கள் அதிகளவில் கூடியிருந்தனர். அவர்களில் கடலில் நீராடிவிட்டு கரைக்கு வந்துகொண்டிருந்த நரைவிழுந்த மூத்த குடிமகன் ஒருவரை பார்த்து "கனக்க சனம் வந்திருக்கிறது" எனக்கேட்டேன்.

முதியவர் சொன்னார் "ஓம்தம்பி எங்கண்ட மூத்தபரம்பரையள் எல்லாம் இந்தக் கேணிக்குள்ளதான் சங்கமிச்சிருக்கினம். ஆடி அமாவாசைக்காவது வந்து அதுகளைப்பார்த்துட்டுப் போன ஒரு சந்தோஷம் தான் முந்தின காலத்தில் ஒவ்வொருத்தரும் செத்துப்போன திதி பார்த்து வந்து போறதுகள் இப்ப அப்பிடிவர ஏலாது தானே. அதுதான் ஏதோ அவையின்ர உயர் பாதுகாப்பு வலயமாம்" என்றார்.

அவருடன் கதைத்துவிட்டு கடலில் குளிப்பதற்காகத் தனது உடைகளை மாற்றிக் கொண்டிருந்த 45வயதுடைய சின்னத்தம்பி என்ற புத்தூரைச் சேர்ந்தவரிடம் சென்று "கீரிமலை எப்படி இருக்கிறது என்று கேட்டேன்." அதற்கு அவர் சற்றும் தாமதிக்காமல் சொன்னார். "தம்பி நான் 12 வருசத்துக்குப் பிறகு இப்பத்தான் வந்தனான். நாங்கள் முந்திவரக்குள்ள இந்த றோட்டெல்லாம் என்னமாதிரி சனம் பிளங்கினது. இப்ப எல்லாம் காடாக்கிடக்குது" என்று கூறிக் கொண்டே தொடர்ந்தார். இந்தக் கடல் கட்டு எல்லாம் முந்தி எப்பிடிக் கிடந்தது. இப்ப எல்லாம் இடிஞ்சுபோய் எல்லாம் நாசமாய் போச்சுது" இப்படியே போனால் ஒரு காலத்தில எல்லாத்தையும் நாசமாக்கிப் போடுவாங்கள்" என்றார் ஆவேசமாக.

அடுத்ததாக நாவற்குழியைச் சேர்ந்த அன்னலிங்கம் என்ற 63 வயதுடைய முதியவரைச் சந்தித்து "என்னையா கடலைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று



கேட்டேன்.

முதியவர் கூறினார் இல்லை மகன் என்ர அப்பு, தான் செத்தாப்பிறகு எரிச்சசாம்பலை கீரிமலையிதான் கரைக்கவேணும் எண்டு சொன்னவர் அதுதான் மகன் அவற்ர கடைசி விருப்பம் ஆனால், அவற்ர கடைசி விருப்பத்தை என்னால் செய்யமுடியேல்ல. இப்ப ஒன்பது வருசத்துக்கு முன்னுக்கு அவர் போட்டார். அவற்ர கடைசி ஆசையை என்னால செய்ய ஏலாமல் போட்டுது. இந்த ஆமிக்காரர் கீரிமலையைப் பிடிக்காமல் விட்டிருந்தால்... என்று தொடர்ந்துவிட்டு இப்படித்தான் எனக்கும் நடக்கும் போல கிடக்குது எப்பதான் நாங்கள் சுதந்திரமாய் இதுகளை செய்யப்போறமோ தெரியாது" என்று கூறினார்.

கீரிமலைக் கேணிக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தின் மேல் கடற்படை காப்பரண் அமைந்திருந்தது. கரையில் இருந்து பார்க்கையில் காங்கேசன்துறைத் துறைமுகம் தெரிந்தது. அப்படியே தேநீர்க் கடையை தேடிப்பார்த்தோம். இராணுவம் மாத்திரம் தேநீர்க்கடை போட்டிருந்தது. வேறு எவரும் கடை போடுவதற்கு அனுமதிக்கவில்லை. தெல்லிப்பளைக்கு அருகில் தான் கச்சான் மற்றும் சிறு வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

அந்த வியாபாரிகளில் ஒருவரிடம் ஏன் உங்களை உள்ளே செல்லவிடவில்லையா? என்று கேட்டேன். அதற்கு அவர் ஆவேசமாகக் கூறினார். நாங்கள் எங்கட மண்ணில வியாபாரம் செய்ய உந்தச் சிங்கள ஆமி எங்களுக்குக் கட்டுப்பாடு போடுறான் என்ன செய்யிறது. இப்ப அவன்ர காலம் எங்கன்ட காலமும் வருந்தானே. என்று சோகமாகக் கூறினார்.

தமிழர்களின் பூர்வீகம் வாய்ந்த சிறப்புப் பொருந்திய ஒரு பகுதி சிங்களத்தின் ஆக்கிரமிப்பில் சிக்கி அழிந்து கொண்டிருக்கிறது. இந்த அவலம் எத்தனை நாள் நீடிக்கப் போகிறது.

சிவகுரு வாணிபமும் TVS மோட்டார் கம்பனியும்

TVS

இணைந்து நடாத்தும்

மாபெரும் இலவச சுத்திகரிப்பும்

TVS சென்ரா அறிமுகமும்

TVS Centra

VTI தொழில்நுட்பம் கொண்டது லீற்றருக்கு 100 Km ஓடக்கூடியது



இடம்: சந்திரன் பூங்கா (பாண்டியன் சுவையூற்று முன்பாக)

யாழ்சாலை கிளிநொச்சி

காலம்: 26-08-2004

வன்னிப் பகுதி அனைத்து TVS உந்துருளி பாவனையாளர்களும் 25-08-2004க்கு முன் சிவகுரு வாணிபத்தில் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.

சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம்

நாயகி கட்டடம், யாழ்சாலை, பரந்தன் கிளிநோச்சி.

(சி-9985)


# சமாதானத்தை முன்னெடுக்க ஆஸி. தொடர்ந்தும் ஆதரவு

## -அரசிடம் தூதுவர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கைக்கு சமாதானம் தொடர்பான பாதையில் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஒத்துழைப்பை வழங்க தாம் தயாராக இருப்பதாக இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் டேவிட்சில் இவ்வாறு கூறினார்.

# திருமலை கடற்படைமுகாமில் கடற்படைச்சிப்பாய் தற்கொலை

திருகோணமலையில் கடற்படைச்சிப்பாய் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுத்தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் இங்கிரியைச் சேர்ந்த எம்.எம்.ரேணுக என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார். தற்கொலைக்கான காரணம் எதுவும் வெளியிடப்படவில்லை.


# அன்பான வழமையாளர்களே!

## உங்கள் நெஞ்சங்களில் நீங்காத

இடம்பிடித்த சேரன் வாணிபம் தற்போது ஆர்ப்பிக்கோ (ARPICO) உற்பத்திப் பொருட்களான;

* ஆர்ப்பிக்கோ நீர்த்தாங்கி.
* ஆர்ப்பிக்கோ மெத்தைகள்.
* ஆர்ப்பிக்கோ கதிரைகள்.
* ஆர்ப்பிக்கோ அலுமாரிகள்.
* ஆர்ப்பிக்கோ ஸ்ரீல் மேசைகள்.
* ஆர்ப்பிக்கோ கம்பியூட்டர் கதிரைகள்.

போன்ற வீட்டு, அலுவலக தளபாட வகைகளை விற்பனை செய்யும் விற்பனை நிலையம் ஒன்றை எதிர்வரும் 23. 08. 2004 ஆம் திகதி இல. 349 பிரதானசாலை கிளிநொச்சியில் திறந்து வைக்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றது.

–ஆர்ப்பிக்கோ (ARPICO) பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் றிச்சாட் பீரிஸ் டிஸ்ரிபூட்டேஸ் லிமிற்றட் (RICHARD PIERIS DISTRIBUTORS LTD) நிறுவனத்தின் வன்னிப்பகுதிக்கான ஒரே வழங்குனர் (SOLE DISTRIBUTOR)

# சேரன் வாணிபம்

## கிளிநொச்சி

4971



## வாடகைக்கார் உரிமையாளர் வன்னி அலுவலகம் இடமாற்றம்

புதுக்குடியிருப்பு முல்லை.வீதியில் வைத்தியசாலை முன்பாக இயங்கிவந்த வாடகைக்கார் உரிமையாளர் கழக அலுவலகம் 18.08.2004 இல் இருந்து அதே புதுக்குடியிருப்பு முல்லை.வீதியில் பாற்பண்ணை முன்பாக உள்ள புதிய அலுவலகத்தில் இயங்குகின்றது என்பதனைச் சகல உரிமையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

தலைவர்.
தே.ரூபன்

(4684)



# 7ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 08 ★ 09 ★ 1968



தாயக மண்ணில் 22 ★ 08 ★ 1997

## லெப்.கேணல் தூயமணி (லெனின்)

(வைத்தியநாதன்-சிவநாதன்)

கேணல் கிட்டு பீரங்கிப் படையணி

ஆறாத்துயரமதில் எங்களை
அலைமோத வைத்து
ஆண்டுகள் ஏழு சென்றாலும்
ஆறுமோ எம் கவலை
கனவினிலாவது வந்து உன்
சோதிமுகம் காட்டேனய்யா!

உன் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

ஐயா,அம்மா
சகோதரர்கள், சகோதரிகள், அத்தான், மச்சான், அண்ணிமார், பெறாமக்கள், மருமக்கள், உறவினர், நண்பர்கள்.

முகவரி:-
சிவாபதி,
212, சந்தையடி,
வட்டக்கச்சி.

(4978)



# மாபெரும் விவசாயக் கண்காட்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ■ கால்நடை உற்பத்தித் திணைக்களம் ■ விவசாயத்திணைக்களம் ■ கைத்தொழில் திணைக்களம் என்பன இணைந்து நடாத்தும்

## மாபெரும் விவசாயக் கண்காட்சி

இடம்:– ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி

காலம்:– 01 – 09 – 2004 தொடக்கம் 04 – 09 – 2004வரை


ஆர்வலர்களே!

*தங்கள் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும், மேலதிக விவசாய அறிவினைப் பெறுவதற்கும்,
*சிறந்த தொழில்நுட்ப முறைகளைக் கண்டறிவதற்கும், செய்கை முறையிலும்,ஒளிப்பட,புகைப்படக் காட்சியுடனும், திட்ட விளக்கவுரைகளுடனும் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள், சிறந்த உற்பத்தியாளர்கள் தங்களிடம் உள்ள விவசாய, கால்நடை உற்பத்திகளை காட்சிக்கு வைப்பதற்கும், விற்பதற்கும் நாடுங்கள்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், வட்டக்கச்சி

(சி.9789)



தி.மு.க. சிறப்பு மாநாடு முகப்பு தோற்றம் பிரமாண்டமான முறையில் குவாலியர் கோட்டை போன்று தத்ரூபமாக முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

# ஆந்திராவில் கப்பல் மூழ்கியது 11 மீனவர்களைக் காணவில்லை

ஆந்திராவில் மீன் பிடிக்கச் சென்ற கப்பல் மூழ்கியதில் காணாமற் போன 11 தமிழக மீனவர்களை மீட்பதற்கு தேடுதல் வேட்டை தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.வங்கக் கடலின் வடமேற்குப் பகுதியில் காற்றமுழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இதனால் வட ஆந்திரக் கடலோரம் மற்றும் ஓரிசாவில் பலத்த காற்று வீசியது. இதனால் தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்கள் காணாமற் போயினர்.

இதில் 11 பேர் தூத்துக்குடி கன்னியாகுமரியைச் சேர்ந்தவர்கள். ஒருவர் கேரளாவைச் சேர்ந்தவர் ஆவார். அவர்கள் சென்ற கப்பல் இயந்திரக் கோளாறு காரணமாகத் திடீரென கடலில் மூழ்கியது. அதில் இந்த 12 மீனவர்கள் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இதில் தப்பித்து வந்த ஒருவர் கூறுகையில், கப்பல் மூழ்கி விட்டதாகவும், மற்றவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை என்றார். காணாமற் போன மீனவர்களை மீட்க இந்தியக் கடற்படை தீவிர முயற்சி செய்து வருகிறது. உலங்கு வானூர்தி மூலமும் தேடுதல் வேட்டை நடந்து வருகிறது.

# உயர் நீதிமன்றம் செயற்பட சுப்ரீம் கோர்ட் உத்தரவு

## —பொலிஸ் ஆணையருக்கு உத்தரவு

(புதுடில்லி)

வக்கீல்கள் போராட்டத்தைத் தொடர்ந்து உயர்நீதிமன்றம் செயற்பட நடவடிக்கை எடுங்கள் என்று சென்னை நகர உயர்நீதிமன்ற ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

மதுரைக்கிளை தொடர்பாக சென்னை வக்கீல்கள் போராட்டம் நடத்தினார்கள். பிறகு மாவட்டங்கள் ஒதுக்கீடு தொடர்பாக தமிழகம் முழுவதும் வக்கீல்கள் போராட்டம் நடந்தது.

அதைத்தொடர்ந்து இந்தப் போராட்டங்களைக் கட்டுப்படுத்த வக்கீல்களுக்கு 25 கட்டுப்பாடுகளை விடுத்து ஐகோர்ட்டு தலைமை நீதிபதி சுபாஷண் ரெட்டி உத்தரவிட்டார்.

# கப்பல் போக்குவரத்துத் தொடர்பில் மத்தியரசு முடிவெடுக்க வேண்டும்

## ம.தி.மு.க பொதுச் செயலர் வை.கோ

(சென்னை)

**தூத்துக்குடிக்கும் கொழும்பிற்குமிடையே கப்பல் போக்குவரத்து நடத்தும் விடயத்தில் மத்தியரசு இறுதி முடிவு எடுக்க வேண்டுமென்று ம.தி.மு.க.பொதுச் செயலர் வை.கோ கூறியுள்ளார்.**

திருச்சியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் வர்த்தக வளர்ச்சிக்கும், சிக்கனமான சுற்றுலாவுக்கும் கப்பல் போக்குவரத்து. பெரும் அவசியம் என்று கூறியுள்ளார்.

இந்தக் கப்பல் போக்குவரத்து தொடங்கினால் விடுதலைப்புலிகள் தமிழகத்தில் ஊடுருவி விடுவார்கள் என்று கூறப்படுவது பற்றி கருத்துக் கூறிய வை.கோ,

கப்பல் போக்குவரத்தினால் தான் அவர்கள் ஊடுருவுவார்கள் என்பதை நம்பமுடியாது. ஏனெனில் விடுதலைப்புலிகள் நினைத்தால் எப்படியும் ஊடுருவி விடுவார்கள் என்றும் கூறியுள்ளார்.

அத்துடன் இந்தப்பகுதியில் கடந்த 12 ஆண்டுகளில் ஆயுத கடத்தல் குறித்த ஒரு வழக்குக்கூட காவல் துறையினரால் பதிவு செய்யப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே பாதுகாப்பைக் காரணம் காட்டி இந்தத் திட்டத்தை தடை செய்யக் கூடாது என்றும் கூறியுள்ளார்.

# மக்கள்தீர்ப்பை மறுக்கும் பா.ஜ.கட்சி அதன் சனநாயக விரோதப்போக்கைக் காட்டுகிறது

## காங்கிரஸ் தலைவி சோனியா

(புதுடில்லி)

அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பினை ஏற்க மறுப்பதன் மூலம் பாரதிய சனதா கட்சி அதன் சனநாயக விரோதப்போக்கினை வெளிப்படுத்துவதாக காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, அக்கட்சியின்மீது நேற்று குற்றம் சாட்டியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று ஆரம்பமான அகில இந்திய காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் தொடக்க உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய சனநாயகக் கூட்டணியின் இந்தப் பிடிவாதப் போக்கும் அதன் அதிகார வெறியும் அக் கூட்டணிக்கட்சியினர் உண்மை நிலையை உணர முடியாமல் செய்கின்றது என்றும்,

அரசியல் ரீதியாக சாகா வரம் பெற்றவர்கள் என்று நம்பும் பாரதிய ஜனதா கட்சியினர் இந்தத் தேர்தல் தோல்வியை எதிர்பார்க்கவில்லை என்றும்,

தேர்தலில் தோல்வியைக் கண்டபோதும் மக்கள் தீர்ப்பை மதிக்காமல், அக்கட்சியினர் செயற்பட்டு வருவதாகவும் கூறியுள்ளனர். தேர்தல் வெற்றியினால் ஏற்படும் மெத்தனத்தை தவிர்த்து அதிகார ஆணவத்திற்கு ஆளாகாமல் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் எனும் உணர்வில் இருக்குமாறு காங்கிரஸ் கட்சியினரை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மணிசங்கரய்யர் மன்னிப்பு கேட்கும்வரை பாராளுமன்றத்தை நடத்தவிடோம்

## குலாம் நபி ஆசாத்

(புதுடில்லி)

மணி சங்கரய்யர் மன்னிப்பு கேட்கும் வரை பாராளுமன்றத்தை நடத்தவிட மாட்டோம் என்று குலாம் நபி ஆசாத்திடம் அத்வானி ஆவே சமாக கூறியுள்ளார்.

மத்திய அமைச்சர் மணி சங்கரய்யர் உத்தரவின் பேரில் போர்ட்பிளேர் செல்லுலார் ஜெயிலில் இருந்த வீர சவார்கர் பெயர் பலகை அகற்றப்பட்டு இருப்பதாக பா.ஜ. குற்றம் சாட்டி வருகிறது. இது தொடர்பாக மணிசங்கரய்யர் மன்னிப்புக் கேட்கவேண்டும். வீரசவார்கர் பெயர் பலகை மீண்டும் செல்லுலார் ஜெயிலில் இடம் பெறவேண்டும் என்று பா.ஜ வற்புறுத்தி வருகிறது. அப்போது தங்கள் நிலையில் இருந்து பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை என்று அத்வானி தெரிவித்து விட்டார். மேலும் வீர சவார்கர் விவகாரத்தில் தங்கள் கோரிக்கைகள் நிறை வேறும்வரை பாராளு மன்றத்தை நடத்தவிட மாட்டோம் என்றும் அத்வானி ஆவேசமாக தெரிவித்துள்ளார்.

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்

ஜனனம் 1977 – 05 – 05

வீரமரணம் 1999 – 08 – 22



## கப்டன் – இலங்கீரன்

(நமசிவாயர் - உதயகுமார்)

யாழ்ப்பாணம்

மாசற்ற மறவனே!

மாவீரர் அணியிலே நீ இணைந்தாய்

மறக்க முடியவில்லை உன் பிரிவை

மானம் காத்திட்ட மைந்தனே

மனம் உருகியே உனை தேடுகிறோம்—நாம்

த.முகவரி:
விசுவமடு - கிழக்கு
விசுவமடு

தகவல்
குடும்பத்தினர்

(4985)

# சாவு அறிவித்தல்

## திருமதி. ஐயாத்துரை இரத்தினேஸ்வரி

**அல்வாய்,துரை அகத்தைச் சேர்ந்த திருமதி ஐயாத்துரை இரத்தினேஸ்வரி 20.08.2004 வெள்ளிக் கிழமை அன்று காலமானார்.**

அன்னார் காலம் சென்ற பொன்னையா ஐயாத்துரையின் அன்பு மனைவியும்,துரைரத்தினம் (ஆதாரவைத்தியசாலை, பருத்தித்துறை), யோகரத்தினம் (காவல்துறை, கிளிநொச்சி), உதயரத்தினம் (பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சமாசம்),பொன்அரசன் (போராளி, ரமணன் நிலான்), கேமச்சந்திரா, திருமதி .ந.இரத்தினமாலா, திருமதி செ.யோகமாலா,திருமதி க.உதயமாலா (கனடா), அனோயா(2ஆம் வருட மாணவி, தேசிய கல்வியற் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும்,

Dr.ந.நடராஜலிங்கம்(ஸ்ரீபதி லம்போதர் கிளினிக்,உரும்புராய்) தி.செல்வநாதன்(பிரதி மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர், அலுவலகம், முல்லைத்தீவு) இ.கணேசலிங்கம், து.இராசவதி, யோ.சிவநந்தினி, உ.ஜீவதேவி (பிரதேசசபை, கரவெட்டி), பொ.ரதனி (போராளி, பிரதீபா) ஆகியோரின் அன்பு மாமியாரும், திரு.த.கனகசபை யின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.08.2004 (சனிக்கிழமை)பிற்பகல் 3.00 மணிக்கு இடம் பெற்று தகனக் கிரியைகள் அல்வாய் பங்கு வேம்படி மயானத்தில் இடம் பெற்றது. இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
தி.செல்வநாதன்(மருமகன்)
எழுதுநர்.,பிரதிமாகாண.
சுகாதார பணிப்பாளர் அலுவலகம்.
முல்லைத்தீவு.

துரைஅகம்,
அல்வாய்.

(4984)

# எதென்ஸ் ஒலிம்பிக் போட்டி - 2004
## பதக்கப்பட்டியலில் அமெரிக்கா முன்னிலையில்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் ஒன்பது நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையில் பதக்கப்பட்டியலில் ஐக்கிய அமெரிக்கா முன்னணியில் திகழ்கிறது.

முதல் இடத்தை அமெரிக்கா கைப்பற்றியிருந்தாலும் நாங்கள் விடமாட்டோம் என்ற ரீதியில் அமெரிக்காவை துரத்துகிறர்ர்கள் சீனா.

தங்கப் பதக்கங்களை பொறுத்த வரை அமெரிக்க, சீன நாடுகள் தலா 17 தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளன.

மொத்தப் பதக்கங்களில் அமெரிக்கா முன்னணியில் திகழ்கிறது. அமெரிக்கா 41 பதக்கங்களையும், சீனா 39 பதக்கங்களையும் பெற்றுள்ளதன் காரணமாக அமெரிக்கா முதல் இடத்தை பெற்றுள்ளது.

பொறுத்திருந்து பார்ப்போம் சீனா முதல் இடத்தை மீண்டும் தக்க வைக்குமா என்று.

# கார்லோஸ் மோயா அதிர்ச்சித் தோல்வி
## தங்கக்கனவு கலைந்தது

ஒலிம்பிக் டென்னிஸ் ஒற்றையர் காலிறுதியில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் மோயா அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். கிரீஸ் ஒலிம்பிக் ஆண்கள் ஒற்றையர் காலிறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தன. இதில் சிலி வீரர் நிகோலஸ் மாசு 6-2,7-5 என்ற நேர் செட்களில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் மோயாவை தோற்கடித்தார். இம்முறை ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட மோயா காலிறுதியில் வெளியேறியது ரசிகர்களை அதிர்.ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. அரையிறுதியில் மாசு அமெரிக்காவின் டெய்லர் டென்டைச் சந்திக்கிறார்.




## எதென்ஸ்-2004
### நேற்றைய போட்டிகளில் சில...



பிரிட்டனின் ஒலிம்பிக் சம்பியன்களான மத்தியு பின்சென்ற், எட்கூடே, ஜேம்ஸ் கிறாக்றெல், ஸ்ரீவ் வில்லியம்ஸ் (இடமிருந்து வலமாக) தமது தங்கப்பதக்கங்களைக் காண்பிக்கின்றனர்.



இத்தாலியின் றபேல்லோ லியனார்டோ, லுகா அகமென்னொனி, லொறன்சோர் போர்ஷியோ, டானியோ டென்ரேல் (இடமிருந்து வலமாக) தமது வெண்கலப் பதக்கங்களுடன் காட்சி தருகின்றனர்.

# மைக்கேல் பெல்ப்ஸ் 5ஆவது தங்கம் வென்றார்



எதென்ஸ் ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் எட்டு தங்கப்பதக்கம் வென்று சாதனை படைப்பார் என்று வர்ணிக்கப்பட்டவர் அமெரிக்காவைச் சேர்ந்த மைக்கல் பெல்ப்ஸ், 200 மீற்றர் பிளிடைல் மற்றும் ரிலோரால் தோற்ற பெல்ப்ஸ் நேற்று முன்தினம் நடந்த 100 மீற்றர் பட்டர்பிளை போட்டியில் தங்கப்பதக்கம் வென்றார். இது அவர் வென்ற ஐந்தாவது தங்கப்பதக்கமாகும்.

# இந்தியாவின் பயஸ், பூபதி ஜோடி
## வெண்கல வாய்ப்பையும் இழந்தது



எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவிற்குத் தங்கப் பதக்கம் பெற்றுக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்பட்ட இந்தியாவின் மகேஸ்பூபதி லியாண்டர் பயஸ் ஜோடி நேற்று நடைபெற்ற வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியிலும் அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டியில் குரோசியாவின் இவானி ஹாக்ஷாட் ஜோடியிடம் 7-6,6-4,7-6 என்ற செட் கணக்கில் தோல்வியுற்று வெண்கலப்பதக்க வாய்ப்பையும் இழந்தது.

ஆரம்பத்தில் இந்திய ஜோடியே வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், குரோசியா வீரர்களின் அபார ஆட்டம் இறுதியில் அவர்களுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.

# இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி
## இனிங்ஸ் தோல்வி நோக்கி மே.தீவு

மேற்கிந்தியத்தீவு இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று மேற்கிந்தியத்தீவு இன்னிங்ஸ் தோல்வியை வெல்வதற்காக கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது.



முன்னதாக முதல் இனிங்சில் இங்கிலாந்து பெற்ற 470 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடிய மேற்கிந்தியத்தீவு முதல் இனிங்சில் 153 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. தொடர்ந்து இரண்டாவது இனிங்சையும் ஆடிவரும் மேற்கிந்தியத்தீவு மதியபோசன இடைவேளையின்போது 6 விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களை பெற்றிருந்தது.

கிறிஸ் ஹெய்ல் 105 ஓட்டங்களை பெற்றார். இதில் ஒரு ஓவரில் ஆறு நான்கு ஓட்டங்களைப்பெற்று சாதனை படைத்தா.

இனிங்ஸ் தோல்வியை தவிர்க்க 51 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் இருக்கும் மேற்கிந்தியதீவு இனிங்ஸ் தோல்வியை தவிர்த்துக் கொள்ளுமா...?

## மூன்று நாடுகள் ஒருநாள் போட்டி;
## பாகிஸ்தானுக்கு 66 ஓட்டங்களால் வெற்றி

நெதர்லாந்தில் நடைபெற்றுவரும் மும்முனை ஒருநாள் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி 66 ஓட்டங்களால் இந்திய அணியைத் தோற்கடிதததது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி பாகிஸ்தான் அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.


மழை காரணமாக 33 ஓவர்களுக்கு போட்டி மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் ஆரம்ப இரு விக்கெட்டுக்களையும் சொற்ப ஓட்டங்களுக்குஇழந்த போதும் மாலிக், அப்துல்ரசாக் ஆகியோரின் சிறந்த துடுப்பாட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. மாலிக் 68 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பாலாஜி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு வெற்றி இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 27வது ஓவரில் 127 ஓட்டங்களைப்பெற்று அனைத்து விக் கெட்டுக்களையும் இழந்தது. பந்துவீச்சில் அப்ரிடி 4 விக்கெட்டுக்களையும்மாலிக் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். சிறப்பாட்டக்காரராக மாலிக் தெரிவானார்.



## எதென்ஸ்-2004
### நேற்றைய போட்டிகளில் சில...



பெண்களுக்கான ஜிம்னாஸ்டிக் தகுதிகாண் போட்டியில் பங்கேற்கும் கனடாவின் ஹீத்தர் றொஸ்-மைக் மனஸ்.



கைப்பந்துச் சுற்றுப்போட்டியின் குழு B க்கான ஆரம்பச்சுற்றுப் போட்டியில் ஜேர்மனியைச் சேர்ந்த கிறிஸ்ரியன் செய்ஸ் (வலது) கங்கேரியைச்சேர்ந்த யேகோ இவன்சிக்கிடமிருந்து வேகமாக வெற்றியிலக்கை அடையமுயற்சி செய்கின்றார்.

## எதென்ஸ்-2004
### நேற்றைய போட்டிகளில் சில...



பெண்களுக்கான ஜிம்னாஸ்டிக்கில் போட்டியிடும் கனடாவின் கரென்கொக் பேர்ன்.



மகளிருக்கான 500 மீற்றர் துவிச்சக்கர வண்டி ஓடல்நேரக் கணிப்பு முயற்சியில் உலக சாதனை படைத்த அவுஸ்திரேலிய வீராங்கனை அனாமியாறஸ்.

# மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகள்
## வவுனியாவில் நேற்று சிறப்புற ஆரம்பம்


வடக்கு-கிழக்கு மாகாண மட்ட மாவட்டங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்று காலை வவுனியா நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் வெகு சிறப்பாக ஆரம்பமானது. நிகழ்வை பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு வவுனியா அரச அதிபர் ஆரம்பித்து வைத்தார். நிகழ்வின் முன்னதாக வவுனியா நகரசபை வாசலில் இருந்து பிரதமவிருந்தினர்கள் சைவப்பிரகாசவித்தியாலய மாணவர்களின் இன்னிசை வாத்தியத்தோடு அழைத்து வரப்பட்டனர். வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான கொடியினை வவுனியா அரசஅதிபர் கே.கணேசும், மங்கல விளக்கினை அரச அதிபரின் பாரியார் திருமதி கணேசும் ஏற்றி ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து மாவட்ட மட்ட வீர வீராங்கனைகள் அணிவகுத்து வந்து பிரதம விருந்தினர்களுக்கு மரியாதை செலுத்தினார்கள். ஒலிம்பிக் தீபத்தினை பிரசன்னா ஏற்றிவைத்தார். போட்டியில் அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, கிளி நொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் திருகோணமலை போன்ற இடங்களிலிருந்து பெருமளவான விளையாட்டு வீர்ஙகள கலந்துகொண்டனர். நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். இரண்டு நாட்கள் நடைபெறும இப்போட்டிகள் இன்று பரிசளிப்பு நிகழ்வுடன் நிறைவுபெறும். (21)




மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்விலிருந்து

## சிந்தனைக்கு



எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிற்பதால், மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து கொடாமல எம்மால் தலைநிமிர்ந்து நிற்க முடிகின்றது.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 22-08-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com

# யார் காரணம்?

சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தையில் ஆர்வமாகவுள்ளார் எனச் சிலர் அபிப்பிராயம் கொண்டுள்ளனர். சில ஆட்சியாளர்கள், இராஜதந்திரிகள் இதனைப் பிரதிபலிக்கவும் செய்துள்ளனர். ஆனால், இது எந்த வகையில் உண்மையாகும்? இது உண்மையானாலும்கூட இதனால் பயன்தான் என்ன?

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கடந்த கால வரலாற்றை நன்கு விளங்கிக் கொண்டவர்கள் சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளில் ஆர்வமாகவுள்ளார் என்பதை கேள்விகள் இன்றி ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஏனெனில், சனாதிபதி சந்திரிகாவின் கடந்த கால நடவடிக்கைகள் இதற்கு மறுபட்டவையாகவே இருந்துள்ளன. அதாவது சனாதிபதி சந்திரிகா சமாதானம் பற்றிப் பேசினாலும், அவர் யுத்தத்தின் மீது ஆர்வம் கொண்டவராகவே இருந்து வந்துள்ளார்.

அதிலும்,. குறிப்பாக, யுத்தத்தை நடத்துவதற்காக சமாதானத்திற்கான புதிய தத்துவம் ஒன்றையே முன்வைத்தவர் அவர். உலகிலேயே சமாதானத்திற்காக யுத்தம் ஒன்றை நடாத்திய பெருமை சனாதிபதி சந்திரிகாவையே சாரும்.

இந்நிலையில், சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஆர்வமாகவுள்ளார் என்ற சிலரின் அபிப்பிராயமானது இவர்கள் சனாதிபதி சந்திரிகாவை நன்கு விளங்கிக் கொள்ளத் தவறியதினால் ஏற்பட்டிருக்கலாம். மாறாக, உண்மையிலேயே சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட முற்படுவாரேயானால், அதற்கு சர்வதேச அழுத்தம் காரணமாக இருத்தல் வேண்டும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா அழுத்தத்திற்கு முகம் கொடுத்தோ, அன்றி கள யதார்த்தத்தைத் தெளிவாக விளங்கிக்கொண்டு இவ்வாறு கூறுவதினாலோ சமாதானத்தின் மீது நம்பிக்கையை வெளிப்படுத்துவதினாலோ, என்ன பயன் ஏற்பட்டுவிடப் போகின்றது? அதாவது, சனாதிபதி சந்திரிகாவினால் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முடியுமா? அன்றித் தீர்வுத் திட்டம் ஒன்றை அமுல்படுத்தத்தான் முடியுமா?

சனாதிபதி சந்திரிகாவின் கையில் நிறைவேற்று அதிகாரம் இருக்கலாம். முப்படைகளின் தளபதியாகவும் அவர் இருக்கலாம். ஆனால், எது அவரிடம் இருந்தும் அரசாங்கம் அவர் கையில் இல்லை என்பதே இன்றுள்ள பிரச்சினையாகும்.

அதாவது, ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்தின் தலைவியாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இருக்கலாம். ஆனால், அரசாங்கத்தை அவரால் தனது எண்ணத்திற்கோ விருப்பத்திற்கோ வழி நடத்துதல் என்பது இயலாததொரு காரியமாகும். ஏனெனில், அரசாங்கத்தில் ஜே.வி.பி. தனது அளவிற்கும் மீறியதாக ஆதிக்கம் செலுத்துகின்றது. இதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் பலம் குறைவடைந்துள்ளமையே காரணமாகும்.

எடுத்துக்காட்டாக, சனாதிபதி சந்திரிகா நிறைவேற்று அதிகாரம் கொண்டவராகவும், அரசாங்கத்தின் / அமைச்சரவையின் தலைவராகவும் இருக்கலாம். ஆனால், தற்போதைய நிலையில், ஜே.வி.பி.யின் அனுமதியின்றி சனாதிபதி சந்திரிகாவால் ஒரு அமைச்சரை நியமிக்கவோ, நீக்கவோ முடியுமா? என்பது கேள்விக்குரியதே. ஜே.வி.பி.யின் ஆசீர்வாதம் இதற்கு முக்கியமானதாகும்.

சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினைத் தீர்வில் ஆர்வம் கொண்டிருந்தால் என்ன? கொண்டிராது போனால் என்ன? ஏனெனில், அவரால் ஜே.வி.பி.யின் அனுசரணையின்றி எதனைச் செய்துவிட முடியும்? விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத்தான் முடியுமா? பேச்சுவார்த்தையின் தீர்வை அமுல்படுத்தத்தான் முடியுமா?

ஏற்கனவே, இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுவதற்கு ஜே.வி.பி. தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. அதனையும் மீறி சனாதிபதி பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினால் அரசாங்கத்தைவிட்டு வெளியேறுவோம் எனவும் எச்சரித்துள்ளது.

இந்த வகையில், சனாதிபதி சந்திரிகாவின் அகச் சூழலும், புறச் சூழலும் கூடச் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவானதாக இல்லாதபோது சமாதானப் பேச்சுக்களில் சனாதிபதி சந்திரிகாவுக்கு ஆர்வம் இருந்தால் என்ன? அக்கறை இருந்தால் என்ன? இதனால் ஏற்படக் கூடிய பயன்தான் என்ன? அரசாங்கத்திடம் ஒத்தகருத்து நிலவாதபோது பேச்சுவார்த்தை என்பது காலத்தை வீணடிப் பதாகவும், பொருட் செலவை அதிகரிப்பதாகவும் இருப் பதைத் தவிர வேறு எதற்கு உதவுதல் கூடும்?

# தேசிய நீர்முகாமைத்துவக் கொள்கை சமர்ப்பிக்க ஆ.அ வங்கி காலக்கெடு

### 17மில். அமெ.டொலர் கிடைக்காதெனவும் அறிவிப்பு

இந்த வருடம் நவம்பர் மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய நீர் முகாமைக் கொள்கை அமைச்சரவைக்குச் சமர்பிக்கப்படா விட்டால் இலங்கைக்கு வழங்க வேண்டிய 17 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கப் போவதில்லை என ஆசிய அபிவிருத்தி வங்கி அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் விவசாய மற்றும் ஆற்றுப்படுகை அமைச்சு என்ற இரண்டு அமைச்சுக்கள் இது தொடர்பாக தமது கொள்கைகளைத் தயாரித்து வருகின்றன.

எனினும் அவை இன்னமும் இறுதிப்படுத்தப்படவில்லை இது தொடர்பில் சர்வதேச அமைச்சரவை உப குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஜே. வி .பி யின் வசமுள்ள விவசாய அமைச்சு அதன் பரிந்துரையை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது.

எனினும் ஆற்றுப்படுகை துறை அமைச்சு இன்னமும் தமது பரிந்துரையை சமர்பிக்கவில்லை.

தேசிய நீர் முகாமைக் கொள்கையானது குறிப்பிட்ட இரண்டு அமைச்சுக்களாலும் சர்வதேச அமைச்சரவை உப குழுவின் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அது சனாதிபதி நடவடிக்கைக் குழுவிடம் சமர்பிக்கப்படவுள்ளது.

இதனையடுத்தே குறிப்பிட்ட தேசிய நீர் முகாமைக் கொள்கை அமைச்சரவைக்கு சமர்பிக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை அண்மையில் சனாதிபதியினால் கையேற்கப்பட்டு, பின்னர் ஜே. வி. பி வசம் உள்ள விவசாய அமைச்சிடம் பொறுப்பளிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட இரண்டு திணைக்களங்கள தொடர்பில் இன்னமும் வர்த்தமானியில் பிரகடனம் மேற்கொள்ளப்படவில்லை என தெரியவந்துளளது.

# ஒவ்வொரு ஒன்பது நிமிடத்துக்கு ஒரு குற்றச் செயல்; 6 1/2 மணி நேரத்துக்கு ஒரு பாலியல் வல்லுறவு

### சிறிலங்காவில் நடைபெற்று வருவதாகப் பொலிஸ்தலைமையகம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒவ்வொரு ஒன்பது நிமிடங்களிலும் சிறிலங்காவில் ஒரு குற்றச் செயல் இடம்பெறுவதாக சிறிலங்கா பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆறு மணித்தியாலத்திலும் ஒரு கொலை இடம் பெறுவதோடு, ஒவ்வொரு ஆறரை மணித்தியாலத்திலும் ஒரு பெண் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்படுகின்றார்.ஒவ்வொரு மணித்தியாலத்திலும் இரண்டு திருட்டுக்கள் இடம் பெறுவதோடு அதையொத்த வகையில் ஆயுத முனைக் கொள்ளைகளும் இடம் பெறுவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த ஆண்டின் முதல் ஆறு மாதத்திலும் 298 வாகனங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும், 25 நபர்கள் வாகனக் கொள்ளையர்களால் கொல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

# நீதியரசர்களுக்கு பாதுகாப்பு வழங்க தனியான பொலிஸ் பிரிவமைக்க முடிவு

நீதிபதிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு தனியான பொலிஸ் பிரிவொன்று அமைக்கப் படவுள்ளது. நீதியமைச்சர் டிபிள்யு. டி.யூ. செனவிரத்ன தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கூட்டமொன்றிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பொலிஸ் பிரிவு விரைவில் ஏற்படுத்தப்படுமென்றும், பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் அதற்குத் தலைமை தாங்கு வாரென்றும் பொலிஸ்மா அதிபர் இந்திராடிசில்வா தெரிவித்துள்ளார். ஏற்கனவே நீதிபதிகளுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு உரிய முறையில் கண்காணிக்கப் படவில்லையென்று கூட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லையென்றும் இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நாட்டை மீட்டெடுக்கும் சவாலை எதிர் கொள்ள ஐ.தே.க. தயாராக வேண்டும்

### -எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கோரிக்கை

நாட்டை மீட்டெடுக்கும் கஷ்ர மான சவாலை எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தயாராக வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியினை மீளப்புனரமைப்பது தொடர்பாக நடைபெற்ற கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை விழிப்பூட்டும் கூட்டத்தின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இந்தக்கருத்தைக் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மீண்டும் எழுபதுகளை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

இரண்டாண்டுகள் அர்ப்பணிப்புக்களைச் செய்த மக்களுக்கு அதன் பிரதி பலன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான பொறுப்பை மக்கள் விடுதலை முன்னணி உட்பட கூட்டமைப்பு அரசாங்கமும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால் மக்கள் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்காகக் குரல் கொடுக்கவும், போராடவும் ஐக்கிய தேசியக் கட்சி தயாராக வேண்டுமென ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் பொருளாதாரத்தை உறிஞ்சும் பூதங்கள் பற்றி அமைச்சர் தெரிவிப்பு

மேல் கொத்மலை மற்றும் நுரைச்சோலை அனல்மின்மையம் என்பன ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரமே நாட்டின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதனை விடுத்து அரசியல் வாதிகளின் தேவைகளுக்காகவும், மதவாதிகளின் தேவைகளுக்காகவும். கைவிடக்கூடாது எனவும் அவர் கேட்டுள்ளார்.

நேற்று கண்டியில் நடைபெற்ற தொழிலதிபர்களுக்கான கருத்தரங்கில் உரையாற்றிய அவர், நாட்டின் பொருளாதார இரத்தத்தை உறிஞ்சுகின்ற பெரும் பஞ்ச பூதங்கள் இருப்பதாக கூறினார்.

கூட்டுறவு மொத்த விற்பனை மையம், தொடருந்து மையம், பெற்றோலியக் கூட்டுத்தானம், இலங்கை போக்குவரத்துச்சபை என்பனவே இவையாகும். இவற்றைக் கொண்டு நடத்துவதற்கு திறைசேரியில் இருந்து கோடிக் கணக்கான ரூபாய்களைக் பெற வேண்டியுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தானம் ஏற்கனவே பெற்ற வங்கிக் கடனைச் செலுத்த வேண்டியுள்ளது. இந்த நிலையில் வங்கிகள் கடனைத் தர மறுக்கின்றன.எனவே தான் இதனைக் கவனத்திற் கொண்டு இந்தியாவின் நிறுவனம் ஒன்றுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றில் ஒரு பங்கைக் கைளித்து, சுமார் 50 ஆயிரம் டொலர் நிதியைப் பெற்று, அதனை வங்கிக்குச்செலுத்தத திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (32)

# புலிகளின் பெயரைக் கூறி குழப்பத்தில் ஈடுபட்ட நான்கு பேர் கொண்ட குழுவுக்கு எச்சரிக்கை

புலிகளினது பெயரைக் கூறி குழப்பத்தில் ஈடுபட்ட இளைஞர் கும்பலொன்று கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவிடம் சிக்கியுள்ளது. துன்னாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் சகிதம் நடமாடி பொதுமக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் இவர்கள் ஈடுபட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் துன்னாலைப் பகுதியிலுள்ள ஒருவரது வீட்டிற்கு நான்கு மோட்டார் சைக்கிள்களில் சென்ற இவர்கள் குறித்த பொதுமகனை விசாரணைக்கென வெளியே வருமாறு அழைத்துள்ளனர்.

எனினும் அங்கு இடம்பெற்ற இழுபறிகளையடுத்து அயலவர்கள் திரண்டதையடுத்து அக்கும்பல் அங்கிருந்து தப்பியோடியுள்ளது.

இது தொடர்பாக உடனடியாக கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவினது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து துரிதமாகச் செயற்பட்ட அவர்கள் அக்கும்பலை மடக்கிப் பிடித்துள்ளனர்.

ஏற்கனவே பல குற்றச் செயல்கள் தொடர்பாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்ததாக கூறப்படும் இந்நால்வர் கொண்டகுழுவினைக் கடுமையாக எச்சரித்து கலாசாரத்தைப்பேணும் இளைஞர் குழு விடுத்துள்ளது. (27)

# சிறில. புலனாய்வுத்துறை அதிகாரியின் பதவி விலகல் கடிதம் ஏற்கப்படவில்லை

## சிறில. இராணுவத்தளபதி தெரிவிப்பு

சிறிலங்கா புலனாய்வுத்துறையினரால் ஓய்வுபெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென சிறிலங்கா இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொட தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொழும்பு உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளில் நடக்கும் அசம்பாவிதங்கள், படுகொலைகளை தடுப்பதற்கு இராணுவப் புலனாய்வுத்துறையை பலப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம்; தற்போதைய சூழ்நிலையில் இவர்களின் சேவைகளை முக்கியமாகக் கருதுகிறோம்; ஆகவே ஓய்வு கோரும் இவர்களது விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ள முடியாது" என தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைவரே ஓய்வு பெறுவதற்காக விண்ணப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# கிளி. திருநகர்ப் பகுதியில் கஞ்சா வைத்திருந்தவர் கைது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி திருநகர்ப் பகுதியில் கஞ்சா போதைப்பொருளுடன் குடும்பஸ்தர் ஒருவர் தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம்தமிழீழ காவல்துறையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து குறிப்பிட்ட இடத்திற்குச் சென்ற காவல் துறையினர் ஒருவீட்டினுள் இருந்து வெளியே வந்த வேளை மேற்படி நபரைக் கைது செய்ததோடு, அவர் தனது உடையில் மறைத்து வைத்திருந்த 100 கிராம் நிறையுடைய கஞ்சாவையும் கைப்பற்றினர்.

இது பற்றி காவல்துறையினர் மேற்கொண்ட விசாரணையின் போது அவர் தான் தொடர்ந்து இப்பொருளைப் பாவித்து வருவதாகவும், தனக்கு தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மன்னாரிலிருந்து கொண்டுவந்து பாவிப்பதாகவும் தெரிவித்துள்ளார். இவரைத் தமிழீழ காவல்துறையினர் நீதிமன்றின் முன் நிறுத்தியுள்ளனர். (சா)

### நல்லூர்....

வாசலில் அங்குமிங்குமாக 11.30 மணிவரை ஓடித்திரிந்தது. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதாகக் கூறும் பொலிசாரே இவ்வாறு நடந்து கொண்டதையிட்டு அங்கு நின்ற அடியார்கள் பெரும் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை காலை நடைபெற்ற கொடியேற்ற வைபவத்தில் ஆலயத்தினுள் திருட்டுச்சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. இல.31, கடையிற்சாமி கோவில் வீதி,நீராவியடியைச்சேர்ந்த பானுகோபன் சானுகாஇரண்டரைவயது சிறுமியின் ஒன்றரைப் பவுண் நிறையுடைய ஒருசோடி காப்பு திருடர்களினால் உருவிச் செல்லப்பட்டுள்ள இதேவேளை நேற்று மாலை ஆலய வீதியில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கலாச்சாரம் பேணும் அமைப்பினரின் தீவிர நடவடிக்கையினை முடுக்கி விடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (செ)

### மட்டு...

தெரியாத நபர்கள் கைக்குண்டை வீசி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், குறிப்பிட்ட இருவரும் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்திருப்பதாகவும் இராணுவத்தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனையடுத்துநேற்று வாழைச்சேனைப்பகுதயில் தேடுதல் நடாத்தப்பட்டபோது எவரும்கைது செய்யப்படவில்லை. (32)

## சாவு அறிவித்தல்

### தர்மலிங்கம் நாகம்மா

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தர்மலிங்கம் நாகம்மா அவர்கள் 21.08.2004 சனிக்கிழமை காலமானார். அன்னார் பொன்னு சின்னம்மாவின் அன்பு மகளும்; தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும்; திலீப்குமார் (யாழ். பல்கலைக்க்ழக முகாமைத்துவ 2ஆம் வருட மாணவன்) திருமாலினி, தினேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 22.08.2004 (ஞாயிற்றுக்கிழமை)பிற்பகல் 2.00 மணிக்கு மிருசுவில் வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில் மன்னங்குறிச்சி. (சி-10085)

தகவல்:-
குடும்பத்தினர்.

### முன்னாள்....

றவில்லையென முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது புதிய அமைச்சர்களுக்கு இருப்பிடங்களைத் தேடுவதில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### இரண்டு....

மக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம், சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

ஐந்து நாடுகளின் ஆயுதபாவனை தொடர்பான கொள்கைக்கு அமைய சட்டவிரோத ஆயுதபாவனையைத் தடுக்க ஆணைக்குழு ஒன்றை அமைக்க அமைச்சரவையின் அனுமதி கிடைத்திருப்பதாகவும் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

### போராளிகள்...

சிறிலங்கா அரசே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டுமெனவும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் இந்திரகுமார் பிரசன்னா தெரிவித்துள்ளார்.

### கழிவுப்...

விநாயகபுரம், பாரதிபுரம் போன்ற பிரதேச மக்கள் ஒன்று திரண்டு குப்பைகளை ஏற்றிவந்த இரண்டு உழவு இயந்திரங்களையும் ஐ.சி.ஆர்.சியின் வாகனத்தையும் தடுத்து வைத்தனர். தமக்கு இறுதியானதும் உறுதியானதுமான முடிவு வரும்வரை வாகனங்கள் செல்ல அனுமதிக்க முடியாது என்றும் போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

வவுனியா பிரதேச செயலாளர் திருமதி ஷால்ஸ், நகரசபைச் செயல்ாளர் வி.எஸ்.எஸ் செல்வராஜாவின் உறுதி மொழிகளையடுத்து மக்கள் கலைந்து சென்றனர். மேற்படி விடயம் தொடர்பாக 10 நாட்களுக்குள் முடிவு எடுக்கப்படும் என்றும், அதன் பின்னர் கழிவுப் பொருட்கள் இப்பகுதியில் கொட்டப்படமாட்டாது என்றும் இவர்கள் தெரிவித்தனர். சமரச முயற்சியில் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொருப்பாளர் தி.ஞானவேல், அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் வன்னி மாவட்டத்தலைவர் செந்தில்நாதன் ஆகியோரும் இதில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது அனைத்து விதமான கழிவுப் பொருட்களும் கொண்டு வந்து கொட்டப்படுவதாகவும், இதன் காரணமாக பிள்ளைகளுக்கு நோய்கள் ஏற்படுவதாகவும் தெரிவித்தனர். மிக நீண்ட காலமாக இது தொடர்பாக தாங்கள் பல முறைப்பாடுகள் தெரிவித்தும் அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்தனர். அத்துடன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கைக்குழந்தை ஒன்றின் சடலம் கூடக் காணப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (21)

# எதென்ஸ் ஒலிம்பிக் -2004 பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம | வெள்ளி | வெண்கலம | மொத்தம |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 19 | 14 | 12 | 45 |
| சீனா | 18 | 13 | 10 | 41 |
| ஜப்பான் | 12 | 05 | 05 | 22 |
| அவுஸ்திரேலியா | 11 | 06 | 10 | 27 |
| ஜேர்மனி | 09 | 07 | 11 | 27 |
| பிரான்ஸ் | 06 | 06 | 07 | 19 |
| இத்தாலி | 06 | 06 | 05 | 17 |
| உக்ரேன் | 06 | 02 | 03 | 11 |
| ரஷ்யா | 05 | 13 | 14 | 32 |
| தென்கொரியா | 05 | 10 | 04 | 19 |
| பிரிட்டன் | 05 | 06 | 06 | 17 |
| நெதர்லாந்து | 03 | 05 | 05 | 13 |
| கிரீஸ் | 03 | 00 | 02 | 05 |
| ருமேனியா | 03 | 00 | 02 | 05 |
| துருக்கி | 03 | 00 | 01 | 04 |
| ஹங்கேரி | 02 | 03 | 01 | 06 |
| சுலோவாக்கியா | 02 | 02 | 01 | 05 |
| ஜோர்ஜியா | 02 | 01 | 00 | 03 |
| தாய்லாந்து | 02 | 00 | 02 | 04 |
| பெலாறஸ் | 01 | 03 | 04 | 08 |
| போலந்து | 01 | 02 | 03 | 06 |
| இந்தோனேசியா | 01 | 01 | 02 | 04 |
| தென்னாபிக்கா | 01 | 01 | 02 | 04 |
| சிம்பாவே | 01 | 01 | 01 | 03 |
| எதியோப்பியா | 01 | 01 | 00 | 02 |
| பல்கேரியா | 01 | 00 | 04 | 05 |
| சுவீற்சர்லாந்து | 01 | 00 | 01 | 02 |
| நோர்வே | 01 | 00 | 00 | 01 |
| நியூசிலாந்து | 01 | 00 | 00 | 01 |
| ஐக்கியஅரபு எமிரேட்ஸ் | 01 | 00 | 00 | 01 |
| ஸ்பெயின் | 00 | 05 | 01 | 06 |
| ஆஸ்திரியா | 00 | 03 | 00 | 03 |

# விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் மன்னாரில் இன்று கருத்தரங்கு

மன்னாரில் வீதிவிபத்துக்களைத் தவிர்க்கும் நோக்கில் மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் அனைவருக்கும் "விபத்தைத் தவிர்த்தல்"என்ற பொருளில் கருத்தரங்கு ஒன்றை இன்று நடத்த மன்னார்அரசியல்துறையினர் ஒழுங்கு செய்துள்ளனர். இதற்கான ஒழுங்குகளை மன்னார்நகரப் பொறுப்பாளர் முடியரசன் அவர்கள் மேற்கொண்டுள்ளார். (மி)

### பிரதமரின்....

பிரதமருக்குத்தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்யும் முறைபான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதில்லை என்றும், இது குறித்து பொலிஸ் ஆணைக்குழுத் தலைவருடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

### பாடசாலை....

சாந்தகுமார் புஸ்பகுமார் என்னும் சிறுவனே இவ்வாறு காணாமல் போனவராவார்.

### கல்முனை....

இவரது கொலை தொடர் பான விசாரணைகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாக பிரதம இன்ஸ்பெக்டர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## சாவு அறிவித்தல்

### ஆழ்வார்பிள்ளை - மார்க்கண்டு

(களஞ்சியப் பொறுப்பாளர் – வல்லை நெசவு)

[ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்]

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வார்பிள்ளை மார்க்கண்டு அவர்கள் 19.08.2004 அன்று சிவபதமடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்ற, ஆழ்வார்பிள்ளை- சிவகாமி ஆகியோரின் அன்பு மகனும்; காலஞ்சென்ற கதிர்காமு, சிவகாமி ஆகியோரின் அன்பு மருமகனும்; கிருஷ்ணன் (சோமு) - சிதம்பரம் ஆகியோரின் சகோதரனும்; லீலாவதியின் அன்புக்கணவரும்; தயாகரன் (றஞ்சன், கனடா), தயாமதி (ஆசிரியை யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரி), தயாநாதன் (ஜேர்மனி), தயாளகௌரி (டென்மார்க்), தயாகுமாரன் (கூட்டுறவுப்பரிசோதகர், கூட்டுறவுக்கணக்காளர், யாழ்ப்பாணம்), தயாளன் (டயாஸ் என்ர பிறைஸ் நடமாடும் வாணிபம், -கொழும்பு- யாழ்- கிளிநொச்சி), தயாநிதி (கல்வியற் கல்லூரி - கணிதம் 2ஆம் வருட மாணவி, யாழ்ப்பாணம்), தயாரஞ்சினி (சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும்; சுகந்தினி (கனடா), வசந்தராசா (டென்மார்க்), ரஜீந்திரன் (மாநகரசபை- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும்; பிரசன்னா (கனடா), பிரவீன் (கனடா), சௌமியா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.08.2004 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் மு.ப.9.00 மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
மா.தயாளன்
(மகன்)

கல்லூரி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (சி-10132)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.